Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

'எரிக் கணேஷ்'
பல் மூக்குக் கண்ணாடி அகம்
566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- சாங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்

'எரிக் கணேஷ்' (சி-1802)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 10 (03.01.2004) சனிக்கிழமை இதழ் :94

# பலாலி விமான ஓடுபாதை புனரமைப்புக்கு இந்தியா 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

## நிபுணர்களின் ஆலோசனையும் வழங்கப்படும்

(கொழும்பு)

**பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசாங்கம் 500 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

அண்மையில் இராணுவத் தளபதியும், முப்படைத்தளபதியுமான லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல இந்தியாவிற்கு விஜயம் செய்தபோது, இந்திய அரசால் இந்த உறுதிமொழியின் அடிப படையிலேயே இவ்வுதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன் பலகல்லவின் நான்கு நாள் இந்திய விஜயத்தின்போது, இந்திய ஹெலிகொப்ரர்களை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம் குடாநாட்டிலிருந்து படைகளை ஏற்றி, இறக்குவது தொடர்பாகவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் ஆராயப்பட்டது.

இதேவேளை - விமான ஓடுபாதை திருத்த வேலை நடைபெறும்போது யாழ்குடாநாட்டிலுள்ள படையினரின் பயணங்களில் சிக்கல்கள் தோன்றலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

விமான ஓடுபாதை மிகவும் அவசரமாகத் திருத்தப்பட வேண்டியுள்ளது. சீரற்றிருக்கும் தற்போதைய விமான நிலைய ஓடுபாதை தொடர்ந்தும் இப்படியே பயன்படுத்தப்பட்டால் விமானங்கள் தரையிறங்குவதில் பாரிய சிக்கல்கள் உருவாகும். இதன்மூலம் பிரதானமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன குடும்பப் பெண் 7 நாட்களின் பின் சடலமாக மீட்பு!

(யாழ்ப்பாணம்)

காணாமல் போயிருந்த குடும்பப் பெண்ணொருவர் ஏழு நாட்களின் பின்னர் குளமொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டருக்கு அருகில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாயாரான மகேஸ்வரன் மகேஸ்வரி (வயது45) என்பவரே நல்லூர் - பண்டாரிக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மனநிலை பாதிக்கப்பட்ட இந்தப் பெண், ஏழு நாட்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து வெளியேறியிருந்தார். இவரை குடும்பத்தவர்கள் பல இடங்களிலும் தேடியபோதும் கண்டு பிடிக்க முடியவில்லை. பின்னர் நேற்றுக்காலை நல்லூரிலுள்ள பண்டாரிக்குளத்திலிருந்து இவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலத்தை கண்ட பொதுமக்கள் உறவினரிடம் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து பொலிஸாருக்குச் செய்த முறைப்பாட்டை அடுத்து அவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மரணவிசாரணைகள் நீதிபதி இ.த.விக்னராஜா நடத்தினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 4 அமைச்சுகளின் செயலர்களை ஜனாதிபதி நேற்று நியமித்தார்!

(கொழும்பு)

நான்கு அமைச்சுக்களுக்கான செயலாளர்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் உள்விவகார உள்ளூராட்சி மற்றும் மகாணசபை அமைச்சின் செயலாளராக ஜி.எம். லீலரத்ன, நீர்வள விவகார அமைச்சின் செயலாளராக எவ்.டபிள்யு ராஜபக்ஷ, அரச போக்குவரத்து அமைச்சின் செயலாளராக எம்.எம்.குறுப் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டிருந்தது

## ஐ.நா. சமாதானப் படைக்கான பயிற்சிக் கல்லூரி நிறுவப்படும்!

### புதுவருட நிகழ்வில் இராணுவத் தளபதி

(கொழும்பு)

ஐ.நா. சபையின் சமாதானப் படைப்பிரிவில் இணைந்து வெளிநாடுகளில் பணிபுரிவதற்காக இலங்கை இராணுவத்திற்கு பயிற்சிக்கல்லூரி ஒன்று ஐ.நா.உதவியுடன் இவ்வாண்டு நிறுவப்படவுள்ளது.

இவ்வாறு இராணுவத் தளபதியும், முப்படைகளின் தளபதியுமான லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல இராணுவத்தினருடனான புத்தாண்டு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல உட்பட இராணுவ உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய பலகல்ல மேலும் தெரிவித்ததாவது,

இராணுவப் படைப்பிரிவு உருவாக்கப்பட்டதிலிருந்து இலங்கை இராணுவம் என்றே அழைக்கப்பட்டு வந்தது. தற்போது அது சிறிலங்கா இராணுவம் எனப்பெயர் மாற்றப்பட்டுள்ளது. அத்துடன், இராணுவம் இதுவரை பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொண்ட பலமான தாக்குதல்கள் மூலம் பல வெற்றிகளைப் பெற்றுள்ளது. அத்துடன் தற்போதைய சமாதான முயற்சிகளில் இராணுவம் தனது உயரிய பங்களிப்பை வழங்கும் அதேநேரம் தனது மேலாண்மையையும் பேணிவருகின்றது. தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் படைகள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.



நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு நான்கு மாத சிறைத்தண்டனை!

### தமிழீழ நீதிமன்றம் உத்தரவு

இரண்டு கிலோகிராம் கஞ்சாவை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், மருதங்கேணி காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்ட நபருக்கு நான்குமாத கால சிறைத்தண்டனையும் ரூபா பத்தாயிரம் குற்றப்பணமும் செலுத்துமாறு தமிழீழ நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கஞ்சா வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட கந்தையா சின்னத்தம்பி என்பவர் மீதான வழக்கு விசாரணை நேற்று கிளிநொசசி மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது

இரண்டு கிலோ கஞ்சாவை வைத்திருந்ததாக குற்றவாளி ஒப்புக்கொண்டார். இதனால் நான்கு மாத சிறைத்தண்டனையும் ரூபா பத்தாயிரம் நீதிமன்றத்துக்கு வழங்க வேண்டுமெனவும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று தீர்ப்பளித்தது.

## றிரோன் தனது தவறை மறைத்து பிறர்மீது பழி சுமத்துகின்றாராம்!

### முன்னாள் இராஜதந்திரிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாட்டமைச்சர் றிரோன் பெர்னாண்டோவும், அவரது பேச்சாளரும் தாம் செய்யும் தவறுகளை மறைத்து மற்றவர்கள் மீது வீணாகப் பழியைச் சுமத்துவதாக முன்னாள் இராஜதந்திரிகள் தெரிவித்ததாக ஜே.வி.பி. சார்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டது.

வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் செய்த நல்ல செயற்பாடுகளைககூட அவரது பெயரைப் பயன்படுத்தாமல் றிரோன் பெர்னாண்டோ தேவையற்ற விதத்தில் விமர்சிப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

போலந்து, பிலிப்பைன்ஸ், லொஸ் ஏஞ்சல்ஸ, ரொறன்டோ மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய இடங்களில் லக்ஷ்மன் கதிர்காமரால் செய்யப்பட்ட நல்லகாரியங்களைக் கூட றிரோன் பெர்ணாண்டோ குறைகூறியுள்ளார். அவரைப் போல, இந்த நாடுகளுக்குச் சென்று பகிடிவிட்டுவிட்டு வந்தவரல்ல கதிர்காமர்.

அத்துடன், பெர்ணாண்டோ பணம் சேகரிப்பதை மறுக்கவில்லை. எனவே அதனை இவர் ஆவண ரீதியாக நிரூபிக்க வேண்டும். இவர் ஏன வெளிநாடுகளுக்குச் சென்றார்? அத்துடன் தன்னுடன் அழைத்துச் சென்றவர்களின் விபரங்களையும் அமைச்சர் வெளியிட வேண்டும்.

அமைச்சரினால் வெளிநாடுகளில் பதவிகள் புதிதாக அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. 17 ஆவது அரசியலமைப்பின்படி இந்த நியமனங்களை பொதுச்சேவை ஆணைக் குழுவே வழங்கவேண்டும். இதனைவிட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் இந்த வருடம் முதல் நடைமுறைக்கு!

(கொழும்பு)

இலங்கையிலுள்ள துறைமுகங்களை பெரியளவில் புனரமைப்புச் செய்வதற்கான திட்டங்கள் இந்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும் என்று துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜப்பானிய அரசின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் காலி துறைமுகத்தில் இரண்டு புதிய நுழைவாயில்கள் கட்டப்படும்.

பன்னிரண்டு கொள்கலன் இறங்குதுறை, கொழும்பு துறைமுகத்தில் கட்டுவதற்கான திட்டமும் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. அத்துடன், அம்பாந்தோட்டை துறைமுகத்தை தனியார்துறையுடன் இணைத்து அபிவிருத்திசெய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 – 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email :- jaffna @ expoavi . com , xesexva tions @ expoavi.com.
(சி -2009)
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...

# வடக்கு உதவிப் பதிவாளர் அலுவலகம் யாழ்.செயலகத்தில் நேற்று திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு உதவிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகம், நேற்று யாழ். செயலகத்தில் திறந்துவைக்கப்பட்டது. இந்த அலுவலகத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் திறந்துவைத்தார்.

முன்னர் மாவட்ட பதிவாளர் நாயகமாகக் கடமையாற்றி தற்போது வடக்கு மற்றும் கிழக்கு பகுதிக்கான உதவிப் பதிவாளர் நாயகமாகப் பதவியுயர்வுபெற்றுள்ள ந.சதாசிவ ஐயரின் தலைமையில் இந்த நிகழ்வு காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரச அதிபர் செ.பத்மநாதன்,மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல், மாவட்ட திட்டப் பணிப்பாளர் பி.சுந்தரம்பிள்ளை உட்பட செயலக அதிகாரிகள் பலரும் கலந்து கொணடனர்.

தலைமையுரை நிகழ்த்திய சதாசிவஐயர் - எமது சேவை இவ்வளவு நாட்களும் யாழ்ப்பாண மக்களுக்குப் பயன்பட்டது. இனிவரும் காலங்களில் வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள அனேகமாக மக்களுக்கும் பயனபடப்போகிறது. அவ்வாறு பயனபடவேண்டும் என்பதே எனது விருப்பமும் ஆகும். வன்னி போன்ற பிரதேசங்களிலேயே எமது சேவை தற்போது அதிகமாகத் தேவைப்படுகிறது.

அங்குள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் தமது ஆவணங்களைத் தவறவிட்டு உள்ளார்கள். எனவே, அந்த மக்களுக்கு எமது சேவை பூரணமாகக் கிடைக்க வழி செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

94 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம், 95 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்விற்குப் பின்னர் மட்டக்களப்புப் பகுதியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதுவரை காலமும் உதவி மாவட்ட பதிவாளராகக் கடமையாற்றிய பொ.ஈஸ்வரதாசன் தற்போது மேலதிக பதிவாளர் நாயகமாகவும் யாழ்ப்பாணப் பதிவாளராகவும் நேற்றுமுதல் செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)





கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கான செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களுடன் கலந்துரையாடுவதையும் - செயலகத்தின் முகப்புத் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

## சேவை நலன் பாராட்டும் முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இன்று சேவைநலன் பாராட்டும், முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

யாழ்.இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் - இதுவரை யாழ்.மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளராகக் கடமைபுரிந்த வி.கிருஷ்ணசாமி அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட உதவி ஆணையாளராக மாற்றம் பெற்றுச் செல்வதற்கான கௌரவிப்பு நிகழ்வும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கௌரவிப்பும் நிகழவுள்ளது.

இந்த நிகழ்விற்கு வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரன் தலைமை தாங்குவார்.

பிரதம விருந்தினராக புதிய யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வின் இறுதியில் கௌரவிப்பாளர்களை மகிழ்விக்கும் பொருட்டு முன்பள்ளி சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன (ப)

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இணையத்தின் தற்போதைய தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில்- அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கம் வகிக்கும் பதின்நான்கு நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

இந்தவருடம் நடைபெறும் பொதுக்கூட்டம் - இணையத்தின் பதின்மூன்றாவது பொதுக்கூட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாகசபை தெரிவு செய்யப்படும் (ச)

# அரசியல் தடைகளை எதிர்கொண்டு குரல்கொடுத்தவர் பீட்டர் ஷல்க்

## பேராசிரியர் அ.சண்முகதாஸ் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு அரசியல் தடைகளையும் எதிர்கொண்டு, ஈழத்தமிழர்களுக்காகக் குரல்கொடுத்தவர் ஐரோப்பிய நாட்டுப் பேராசிரியர் பீட்டர் ஷல்க்.

இவ்வாறு பாராட்டுத் தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் சுவீடன் நாட்டு உச்சாலாப் பல்கலைக்கழகத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. இந்தத் தொடர்பிற்கு மிகமுக்கிய காரணகர்த்தாவாக விளங்குபவர்கள் பேராசிரியர் பீட்டர் ஷல்க்கும் அவரது பாரியாரும் ஆவார்.

சுவீடனில் உள்ள உச்சாலா பல்கலைக்கழகமானது, யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள பல பேராசிரியர்களை உருவாக்கித் தந்துள்ளது இதற்கு இவரது சேவை மிகமுக்கியமானது.

எமது மக்கள் வாழும் இடமெல்லாம் இவரிடம் கற்ற பல அறிஞர்கள் வாழ்கின்றனர். எமது மண்ணின் பல அரிய வரலாறுகளை ஆராய்ந்து வெளிப்படுத்திய பெருமைக்குரியவர் என்ற சிறபபையும் இவர் பெறுகின்றார்.

ஈழம்பற்றிப் பேசிய மிகமுக்கிய ஐரோப்பிய பேராசிரியர் என்ற சிறப்பையும் பெறுகிறார். தமிழ்பௌத்தம் ஈழத்தில் இருந்துள்ளமையைப் பல சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தினார். எனினும் இக்கருத்தால் பாரிய அரசியல் தடைகளையும், எதிர்ப்புக்களையும் சம்பாதித்துக்கொண்டபோதிலும் துணிவுடன் அவற்றை வெளிப்படுத்தினார்.

அரசியல் தடைகளால் துன்பப்பட்டபோதிலும், ஈழத்தமிழர்கள் பற்றி தனது சரியான வரலாற்றுப் பார்வையை வெளியிட்டவர். இதனை எமது மக்களும் உணரவேண்டும் என்பதற்காகவே அவரைக்கொண்டு ஐரோப்பாவில் இந்துமதத்தின் நிலைகுறித்து உரையாற்றச்செய்கிறோம்.

எமது சமய, சமூக, வாழ்வியல் முறைகள் பற்றிப் பிறநாடுகளில் அவர் பல்வேறு விளக்கங்களையும் வழங்கிவருகிறார். புலம்பெயர்ந்த எமது மக்களின் வாழ்வியல் பற்றிய இவரது கருத்துக்கள் எம்மவர் மத்தியில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியுள்ளது. ஐரோப்பாவில் ஒருவர் எமது சமூகப்பிரச்சினையை உணர்ந்து அதுபற்றி பேசிவருவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது என அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ப)

## மகளிருக்கான விளையாட்டுப்போட்டி யாழ்.குடாவில் நடத்தப்படவுள்ளது!

மகளிர் தினத்தை முன்னிட்டு - யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையும், மகளிர் அரசியல்துறையும் இணைந்து, மகளிருக்கான மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

முதன்முதலாக பெண்கள் தனித்துவமாகப் பங்குகொள்ளும் இந்தப் போட்டியில் - தடகளப்போட்டிகளும், கிளித்தட்டு, கரப்பந்தாட்டம், சைக்கிளோட்டம், மரதனோட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பெண்கள், தத்தமது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்களோடும், கோட்ட மகளிர் அரசியல் துறையினரோடும் தொடர்புகொள்ளுமாறு, யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி போட்டியில் பங்குபற்றி முதல் இரண்டு இடங்களையும் பெறும் வீராங்கனைகள், வடக்கு - கிழக்கு பகுதியை இணைத்து தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும் போட்டிகளில் பங்குகொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'முடக்கம்' சமூக விமர்சன நாடகம் நாவலர் கலாசார மண்டபத்தில்!

செயற்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் - நாளை பிற்பகல் 4 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் 'முடக்கம்' என்னும் சமூக விமர்சன நாடகம் ஒன்று இடம்பெறவுள்ளது.

சமகால நிகழ்வுகளை நகைச்சுவை உணர்வுடன் சித்தரிக்கும் இந்த நாடகமானது, தே.தேவானந்தினால் எழுதி நெறியாள்கை செய்யப்பட்டுள்ளது. இந்த நாடகத்தின் மூலம் எமது மக்களின் அவலஙகளை சர்வதேச தொண்டு நிறுவனங்கள், அதிகாரிகள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற விடயம் விமர்சன நோக்கில் பேசுவதுடன் இடம்பெயர்ந்தோரின் அவலங்களும் பேசப்பட்டுள்ளது. (ப)

## 50 கிலோமீற்றர் சைக்கிள் பயணம்!

பருத்தித்துறை சாரணர் மாவட்டத்தைச் சேர்ந்த திரிசாரணரின் 2 அணியினர் - வடமராட்சி கிழக்குக்கு 50 கிலோமீற்றர் சைக்கிள் பயணத்தை மேற்கொண்டு திரும்பினர்.

வடகிழக்கு மாகாண சாரணர் பிரதிப் பயிற்சிப் பணிபபாளர் கே.செல்வவிநாயகம், மாவட்ட ஆணையாளர் எ.எ.ஜகநாதன் ஆகியோரின் வழிகாடடலில் திரிசாரணத் தலைவர்களான எஸ்.அனல்தாசன், எஸ்.நிதர்சன் ஆகியோர் தலைமையில் இந்த சைகிள பயணம் நடைபெற்றது. (17)

## இணுவில் விளையாட்டுக்கழக மென்பந்து சுற்றுப்போட்டி!

(இணுவில்)

இணுவில் இந்து விளையாட்டுக் கழகம், தனது 46 ஆவது வருட நிறைவை ஒட்டி மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

ஏழு பேர் மட்டும் பங்குகொள்ளும், பதது பந்துப் பரிமாற்றங்களைக கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில், யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்ற முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது

போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்ப படிவங்களைப்பெற்று, நூறு ரூபா நுழைவுக் கட்டணத்துடன் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன் தமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு இந்து விளையாட்டுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

விண்ணப்ப படிவங்களை - நவீன சந்தையிலுள்ள ராஜ் பிரதேர்ஸ், இணுவிலில் உள்ள லட்சுமி உணவகம், சுன்னாகம் பஸ் நிலையத்திக்கு முன் உள்ள மகாலட்சுமி பென்சி பவுஸ் ஆகிய வியாபார நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## துன்னாலைப் பகுதியில் 200 மலசலகூடம் அமைப்பு!

இந்துகலாசார அமைச்சின் உதவியுடன், துன்னாலை மக்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் திட்டத்தின்கீழ், 200 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

துன்னாலை மேற்கு, துன்னாலை தெற்கு முதலான பகுதிகளிலேயே இந்த மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான சுகாதாரத்தைப் பேணும் பொருட்டே, பின்தங்கிய கிராமப்புற மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு, இத்தகைய மலசலகூடம் அமைக்கும் திட்டத்தினை யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இந்து கலாசார அமைச்சு மேற்கொண்டுவருவதாகத் தெரியவருகின்றது. (ப)

## ஆதீன முதல்வரைக் கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் அருட்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளாரையும், தர்மபுரம் ஆதீன அடிகளார் ஸ்ரீமத் குமாரசுவாமியையும் வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு, இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## திருவாசக முற்றோதல்

(உடுவில்)

கடவுள் சந்நிதி, உடுவில் கிழக்கில் நாளை திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் அனைவரையும் பங்குகொண்டு பயன்பெறுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர் (55)


THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1 இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும்
GRAMMAR, SPOKEN ENGLISH
மேற்படிப்பு வரை.
பதிவுக்கு
அதிபர்
426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (564)

நிறைஞ்சனாஸ் சங்கானை
நாளை வரை மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-2004)

சிறு விளம்பரம்

தபால் மூலம் சிங்களம்

இப்போது நீங்கள் சிங்கள மொழியை வீட்டில் இருந்தவாறு பேச/எழுத/வாசிக்க/படிக்கலாம். விபரங்களுக்கு எழுதவும் :-வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, இல.56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-2006)

ராஜா யாழ்ப்பாணம்.
விஜய், ஜோதிகா, ரகுவரன், கௌசல்யா நடித்த
திருமலை
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2005)

# இலங்கை விவகாரத்தில் அந்நிய தலையீடு உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டும்!

## ஜே.வி.பி. வற்புறுத்து

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டுப்பிரச்சினைகளில் சர்வதேச சக்திகள் தலையிடுவது உடன் நிறுத்தப்படவேண்டும் என ஜே.வி.பி. கோரியுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி. விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் முறுகல் நிலையானது, இலங்கைக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளப்படவேண்டும். இந்த விடயத்தில் வெளி நாட்டு சக்திகள் தலையிட வாய்ப்பளிக்கக்கூடாது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ், கடந்த வாரம் தெரிவித்த கருத்தானது - இலங்கையை அச்சுறுத்தும் பாணியில் அமைந்துள்ளது. இது ஏற்கக்கூடிய ஓர் செயல் அல்ல.

அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளைக் கொண்டு உள்நாட்டு அரசியல் நிலையைக் கட்டுப்படுத்த முனைகிறது. இது மிகவும் கண்டனத்திற்குரியதாகும் என அந்தக் கட்சி மேலும் குற்றம் சுமத்தியுள்ளது.

# திலங்க சுமதிபாலவை விடுவித்த நீதிபதியின் மீது குற்றப்பத்திரிகை!

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபாலவை பிணையில் செல்ல அனுமதித்தது தொடர்பில், சேவையில் இருந்து நீக்கப்பட்ட நீதிபதி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

இந்தத் தகவலை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

திலங்க சுமதிபாலவின் மீது தொடரப்பட்ட வழக்கு - பிறிதொரு நீதிவானால் விசாரணை செய்யப்பட்டுவந்த அதேநேரம், மேலதிக நீதிவான் ஆனந்த கம்லத் ஆராய்ச்சி - பூரணை தினம் ஒன்றில் அழைத்து திலங்க சுமதிபாலவைக் குற்றச்சாட்டில் இருந்து விடுவித்தார்.

இதனையடுத்து, நீதிச்சேவை ஆணைக்குழு ஆனந்த கம்லத் ஆராய்ச்சியை சேவையிலிருந்து இடைநிறுத்தி வைத்திருந்தது.

இதேவேளை, சம்பவ நேரம் கடமையில் இருந்த இரு பொலிஸ் அத்தியட்சகர்களிடமும் மற்றும் கொழும்பு மாவட்ட நீதிவானிடம் இருந்தும் நீதிச்சேவை ஆணைக்குழு வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

(01)

# சமமற்ற அதிகாரப் பரவலாக்கலை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்காதாம்!

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்



(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கல் எப்போதும் சமமற்றமுறையில் அமைந்துவிடக்கூடாது என்ற நிலைப்பாட்டை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது எனக் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கட்சி அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் தனது பங்கைச் சரிவரச் செய்துவருகின்றது. அதனடிப்படையில் எம்மால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வு தொடர்பான பிரேரணை ஒன்றை விரைவில் முன்வைக்கவுள்ளோம்.

எம்மால் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான சட்டவரைபானது - இலங்கை முழுவதற்குமானதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வடக்கு - கிழக்கிற்கு மட்டும் நடைமுறைக்கு உகந்த இடைக்கால யோசனை சாத்தியப்படக்கூடிய ஒன்றல்ல. நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கு வழி வகுக்காத எந்த யோசனையும் அர்த்தமற்றதாகிவிடும்.

நாடு முழுவதற்குமான இடைக்கால சட்டவரைபு ஒன்று உருவாக்கப்படவேண்டும். இதனையே முஸ்லிம் காங்கிரஸ் செய்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் சமமானதாக இருக்கும்போதுதான், தீர்வும் நிரந்தரமானதாக அமையும். எம்மால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான சட்டவரைபு ஒன்று எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்ததும் சமர்ப்பிக்கப்படும்.

அரசின் ஆலோசனைகள், பொது ஜன ஐக்கிய முன்னணியில் கடந்த 2000 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள், அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சட்டவரைபு தொடர்பான யோசனைகள் முதலானவற்றை உள்ளடக்கியதாகவே எமது திட்டவரைபு அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டவரைபில் காணும் பலவிடயங்களை இது ஒத்திருக்கும்.

நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களையும் உள்ளடக்கக்கூடிய ஒற்றுமைப்பட்ட தீர்வையே இலங்கை மக்கள் விரும்புகிறார்கள். இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டதே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கவுள்ள அரசியல் ரீதியிலான நிர்வாக யோசனையாகும் என, அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## புதிய நீதிபதிகளை நியமிக்க நடவடிக்கை

நாட்டில் நிலவும் நீதிபதிகளின் வெற்றிடங்களுக்குப் புதிய நீதிபதிகளை நியமிக்கவுள்ளதாக, நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் செயலர் சந்தன ஜெயதிலக இது தொடர்பாக தெரிவிக்கையில்-

இந்தப் பதவிகளுக்கு நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அத்துடன், பெருமளவு நீதிபதிகள் ஓய்வுபெற்றதும், பலபேர் நாட்டைவிட்டு வெளியேறியதுமே நீதிபதிகளுக்கான வெற்றிடங்கள் ஏற்படக் காரணமெனவும் அவர் தெரிவித்தார்.

# மண்சரிவால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மீளவும் புனரமைக்கப்பட்டுள்ளதாம்!

## தேசிய அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த மே மாதம் ஏற்பட்ட மண் சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும் வெற்றிகரமாகப் புனரமைக்கப்பட்டதாகச் சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் என்.டி. ஹெட்டியாராட்சி தெரிவிக்கையில், கடந்த 7 மாதங்களில் 2740 வீடுகள் புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. பகுதியாய் சேதமடைந்த 15,000 வீடுகள் திருத்தப்பட்டுள்ளன.

இந்த புனரமைப்பு பணிகளுக்கு 2.2 பில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது இதில் 1.5 பில்லியனை உலக வங்கி தந்துள்ளது. வீடுகளைக்கட்டி முடிப்பதற்கு இந்தப் பகுதிகளில் பொருத்தமான நிலங்களைக் கண்டுபிடிக்காமையே புனரமைப்புப் பணிகள் தாமதமடைவதற்குக் காரணமாகும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பகுதிகளிலுள்ள வீதிகளைத் திருத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும், பாடசாலைகளைத் திருத்துவதற்கு யுனிசெப் நிறுவனமும் நிதியுதவிகளை வழங்கியுள்ளன.

இந்த மண்சரிவு, வெள்ள அனர்தங்களால் - ஐந்து மாவட்டங்களிலும் சுமார் ஒரு லட்சத்து 37 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்ததோடு, 10 ஆயிரம் வீடுகள் முழுமையாகவும், 25 ஆயிரம் வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்ததுடன், பெருமளவு சொத்துக்களும் அழிவடைந்தன.

# புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை தமிழில் தெரிவித்த ஜனாதிபதி!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை நாட்டுமக்களுக்குத் தமிழ்மொழியில் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு தினத்தன்று தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு வாழ்த்துச் செய்தியினை வாசித்தார்.

இதன்போது - தொலைக்காட்சி ஊடாக தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் அவர் வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்த வாழ்த்துச் செய்தியில், நாட்டிலுள்ள மக்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு, தாம் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றேன் என்றும், பொதுமக்களுக்கு எந்தவித இடையூறுகளையும், துன்பத்தையும் ஏற்படுத்தாத வகையில் செயற்படவேண்டுமெனவும், ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார். (01)

# சுகாதார ஊழியர்களின் போராட்டம் அரசியல்வாதிகளால் குழப்பம்!

## சுகாதார ஊழியர்கள் குற்றச்சாட்டு

சுகாதார சேவை ஊழியர்கள் நடத்திவரும் கறுப்பு வாரப் போராட்டத்திற்கு - அரசியல்வாதிகள் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

சம்பள முரண்பாடு தொடர்பாகச் சுகாதார ஊழியர்கள் இத்தகைய போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

மாத்தளை வைத்தியசாலையில் இத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை, அங்கு வந்த அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் - கறுப்புக் கொடிகளை அகற்றியதாக சுகாதார ஊழியர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனை ஆட்சேபித்து, வேலை நிறுத்த போராட்டம் ஒன்று நடைபெறுகின்றது.

இதேவேளை, தமது கோரிக்கை தொடர்பாக - அமைச்சர் கருஜெயசூரிய தலைமையிலான குழுவினருடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் தீர்வு காணப்படாதுவிடின், மீண்டும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஊழியர்கள் ஈடுபடவுள்ளனர். (01)

### அமைச்சர் திஸநாயக்கவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா நீதிமன்றத்தை அவமதித்ததாகத் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பூர்வாங்க விசாரணையொன்றை உயர்நீதிமன்றம் ஆரம்பித்துள்ளது.

அமைச்சரின் கூற்றுக்கள் - நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் பாரதூரமானதா என்பதைக் கண்டறிந்து தமக்கு விளக்குமாறு, பிரதம நீதியரசர் சரத் என் சில்வா 9 நீதிபதிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். கடந்த நவம்பர் மாதம் எஸ்.பி.திஸநாயக்க ஹபராதுவவில் தெரிவித்த கருத்துக்கள் சர்ச்சைக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புத்தாண்டு தினத்தில்

# காலியில் குழு மோதல் ஒருவர் பலி, 30 பேர் காயம்!

காலி - வந்துலுவப் பகுதியில் புத்தாண்டு தினமான நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரு குழுக்களுக்கு இடையிலான மோதலில், ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 30 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

புத்தாண்டுப் பிறப்பைக் கொண்டாடும் முகமாக, நேற்றுமுன்தினம் அதிகாலை வரை இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட இரு குழுக்கள் - தமக்கிடையே மோதிக்கொண்டன.

இந்த மோதல் சம்பவத்தையடுத்து, அப்பகுதியில் கைக்குண்டொன்றும் வீசப்பட்டுள்ளது. இதனாலேயே இந்த உயிரிழப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

காயமடைந்தவர்களில் 10 பேர் பொலிஸார் எனவும் தெரியவருகிறது. காயமடைந்தவர்களில் பலர் இராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரியவருகின்றது.

# ரயில் நிலையங்களில் புகைத்தலுக்குத் தடை

சகல ரயில் நிலையங்களிலும் நேற்றுமுன்தினம் முதல் புகைபிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாக, ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயில்வே நிலையங்கள் மற்றும் ரயில் பெட்டிகள், ஏனைய இடங்கள் போன்றவற்றில் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. பயணிகளின் நன்மை கருதியே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக - ரயில்வே திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு - கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களில் ஏற்கனவே இந்த புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடந்த ஆண்டுமட்டும் 5 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை!

(கொழும்பு)

கடந்த ஆண்டு மட்டும் ஐந்து லட்சம் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்து சென்றுள்ளதாக, சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வந்துசென்ற ஆண்டாகவும் கடந்த ஆண்டே காணப்படுகின்றது.

இங்கிலாந்திலிருந்து நேற்றுமுன்தினம் பகல் இலங்கைக்கு வருகைதந்த தம்பதியருடன் இந்த ஐந்து லட்சம் என்ற தொகை ஏற்பட்டது.

இந்த இருவரையும் சிறப்பான முறையில் வரவேற்ற இலங்கை சுற்றுலாத்துறையினர் - அவர்களுக்கு நினைவுப்பரிசினையும் வழங்கியுள்ளார்கள்.

### அவுஸ்ரேலியாவுடனான

# இறுதி டெஸ்ட் போட்டியில் இந்தியா மூன்று விக்கெட் இழப்பிற்கு 284



இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் இந்திய அணி மூன்று விக்கெட் இழப்பிற்கு 284 ஓட்டங்களைப்பெற்றது.

சிட்னியில் நேற்று ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் கங்குலி தனது அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

ஆரம்ப ஆட்டக்காரர்களாக களம் இறங்கிய சோப்ரா நிதானமாக ஆட்டத்தை தொடர அவருடன் ஜோடிசேர்ந்த வீரேந்தர் ஷேவாக் அதிரடியாக ஆடி அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். 7 பவுண்டறிகள் 1 சிக்ஸருடன் இவர் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

மதிய உணவு இடைவேளையின்போது 95 ஓட்டங்களை - விக்கெட் எதுவும் இழக்காமல் பெற்ற இந்திய அணி, மதிய இடைவேளைக்குப் பின்னர் தனது முதல் விக்கெட்டை இழந்தது.

72 ஓட்டங்களை 10 பவுண்டறிகள் மற்றும் 1 சிக் ஸருடன் எடுத்த ஷேவாக், கிலெஸ்பி வீசிய பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ராகுல் ட்ராவிட் சோப்ராவுடன் ஜோடி சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தபோது பிரட்ல வீசிய பந்துக்கு தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார் சோப்ரா. இவர் 45 ஓட்டங்களைப் பெற்றார்.



அடுத்து ட்ராவிட்டுடன் சச்சின் டெண்டுல்கர் சோடி சேர்ந்தார். இந்திய அணி 194 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த ராகுல் ட்ராவிட் ஜிலெஸ் பியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

முதல்நாள் ஆட்டம் நேற்று இடைநிறுத்தப்பட்டபோது சச்சின் டெண்டுல்கரும் லக்ஷ்மனும் விளையாடிக்கொண்டிருந்தனர். 12 பவுண்டரிகளுடன் சச்சின் 73 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 29 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

கடந்த பல போட்டிகளில் சிறப்பாக விளையாடாத சச்சின் இப்போட்டியில் 73 ஓட்டங்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர் டெஸ்ட் போட்டியில் 9 ஆயிரம் ஓட்டங்களை இந்தப் போட்டியில் பெற்ற 36 ஆவது ஓட்டத்தின் மூலம் கடந்தார்.

இப்போட்டியில் ஷகீர்கானுக்கு பதிலாக இர்யின் பதானும், நெஹ்ராவுக்கு பதிலாக முரளி கார்த்திக்கும் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலியாவுக்கு முதலிடம்

கடந்த ஆண்டு இடம்பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் அணிகளுக்கிடையிலான சர்வதேச தரவரிசைப் பட்டியல் லண்டனில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

இந்த சர்வதேச தர்வரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலிய அணி 130 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றிருக்கிறது. 111 புள்ளிகளைப் பெற்ற தென்னாபிரிக்கா அணி இரண்டாவது இடத்திலுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கு 102 புள்ளிகள் கிடைத்துள்ளதன் அடிப்படையில் மூன்றாம் இடத்தை வகிக்கிறது. 96 புள்ளிகளுடன் இலங்கை அணி ஆறாவது இடத்தையும், 95 புள்ளிகளைப் பெற்ற இந்திய அணி ஏழாம் இடத்தையும் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நியூசிலாந்து-பாகிஸ்தான் இடையே ஒரு நாள் போட்டித் தொடர் இன்று!

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி - அந்த நாட்டு அணியுடன் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று விளையாடவுள்ளது.

ஐந்து ஒருநாள் போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரின் முதல் ஆட்டம் இன்று நியூசிலாந்தின் ஓக்லண்ட் நகரில் இடம்பெறவுள்ளது.

நியூசிலாந்துக்குச் சென்ற பாகிஸ்தான் அணி அந்த நாட்டு அணியுடன் விளையாடிய இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என்ற கணக்கில் வெற்றியைப் பெற்றது.

இந்த நிலையில், தொடரைத் தனது சொந்தமண்ணில் பறிகொடுத்த நியூசிலாந்து அணி ஒரு நாள் போட்டித் தொடரையாவது கைப்பற்றவேண்டும் என்ற நிலையில் இன்று பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவிருக்கிறது.

# விளையாட்டு

# பை-ரண்ணர் முறை நீக்கப்படவேண்டுமாம்

## ஓய்வுபெறும் ஸ்ரீவ்வோ கருத்து



இந்திய அணி பயிற்றுனர் ஜோன்ரைட்டிடம் விடைபெறுகிறார் ஸ்ரீவ்வோ.

பை-ரண்ணர் முறையைக் கிரிக்கெட்டில் இருந்து நீக்கவேண்டும் என்று, ஓய்வுபெறப்போகும் அவுஸ்திரேலிய அணியின் கப்டன் ஸ்ரீவ்வோ கருத்து தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் வீரர் ஒருவர் காயம் அடைந்தால் - அவருக்குப் பதிலாக பை-ரண்ணர் (மாற்று வீரர் ஓடி ரண் எடுப்பது) பயன்படுத்திக் கொள்ள அனுமதி உண்டு. இந்த முறையை கிரிக்கெட்டில் இருந்து நீக்க வேண்டும் என்று ஓய்வு பெறப்போகும் அவுஸ்திரேலிய் கப்டன் ஸ்ரீவ்வோ கருத்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறுகையில்- துடுப்பாட்டவீரர் ஒருவர் காயம் அடைந்துவிட்டால், அவர் தனது வழக்கமான முறையில் ஆடி ரண் எடுக்கவேண்டும்.

அல்லது விக்கெட்டை இழக்க வேண்டும். பதிலாக பை - ரண்ணர் களம் இறங்குவதால் ஆடுகளத்தில் ஏகப்பட்ட குழப்பம் ஏற்படுகிறது. அதுவுமில்லாமல் உண்மையாகவே துடுப்பாட்டவீரர் காயம் அடைந்து இருக்கிறாரா, என்ற குழப்பமும் உண்டாகிறது என்றார்.

# சோனியா காந்தியுடன் பேசியதே கூட்டணிக்கான ஆரம்பப் பேச்சு!

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி தொலை பேசியில் தொடர்புகொண்டு பேசியதையடுத்து, தி.மு.கவுக்கும் காங்கிரசுக்கும் இடையிலான கூட்டணி குறித்த பேச்சுக்கள் ஆரம்பித்துவிட்டதாக கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

தி.மு.க தலைவர் மு.கருணாநிதி, காங்கிரஸ் கட்சியின நாடாளுமன்ற உறுப்பினரும், சோனியா குடும்பத்தின் நெருங்கிய நண்பருமான மணிசங்கர ஐயர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.



மணிசங்கர ஐயருடன் கருணாநிதி

இந்தச் சந்திப்பையடுத்து, செய்தியாளரிடம் கருத்து வெளியிட்டபோதே, கலைஞர் மு.கருணாநிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கூட்டணி பற்றிய ஆரம்பப்பேச்சுக்கள் சோனியா காந்தியிடம் என்ன பேசப்பட்டதோ அதைப்பற்றியே மணி சங்கர ஐயருடன் பேசினேன். சோனியா காந்தி பேசியதுதான் ஆரம்பப் பேச்சுவார்த்தை. இந்தப் பேச் சுக்கள் தொடரும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பாரிய கூட்டணியை ஏற்படுத்த சோனியா தலைவர்களுடன் பேச்சு!



பாரதீய ஜனதாவுக்கு எதிராக வலுவான கூட்டணி ஏற்படுத்த முயன்றுவரும் சோனியாவுக்கு இன்னும் முழுமையான ஆதரவு கிடைக்கவில்லை.

இந்திய நாடாளுமன்றத்துக்கு மே மாதம் தேர்தல் நடக்க இருப்பதால் கூட்டணி அமைக்கும் முயற்சிகளில் பாரதீய ஜனதா - காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. ஆனால் இதுவரை எந்த கூட்டணி உடன்பாடும் எட்டப்படவில்லை. காங்கிரஸ் தலைவி சோனியா, பா.ஜ.கவுக்கு எதிராக கூட்டணி அமைக்கும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இந்த மாத இறுதிக்குள் பா.ஜ.கவுக்கு எதிராக உள்ள எல்லா கட்சிகளையும் ஓரணியில் திரட்ட அவர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். அதே வேளை, உத்தரப்பிரதேசத்தில் பகுஜன் சமாஜக் கட்சி, சமாஜ் வாடி கட்சிகளை ஒரே அணியில் நிற்கவைக்க சோனியா எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. பகுஜன் சமாஜ் கட்சித்தலைவர் மாயாவதியுடன் நேற்று முன்தினம் சோனியா பேசினார்.

இது சமாஜ்வாடி கட்சித்தலைவர் முலாயம்சிங்யாதவுக்கு பிடிக்கவில்லை. மாயாவதி இருக்கும் அணியில் இருக்கமாட்டேன் என்று அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையே காங்கிரஸ் தலைமையில் பெரும் கூட்டணியை உருவாக்கி விடவேண்டும் என்பதில் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சித் தலைவர்லல்லு பிரசாத் யாதவ் தீவிரமாக உள்ளார். அவர் நேற்று பாட்னாவில் நிருபர்களிம் கூறுகையில் பா.ஜ.கவை எதிர்க்கும் தலைவர்கள் தங்கள் கௌரவத்தை ஓரம்கட்டி வைத்துவிட்டு ஒன்று சேரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அவர் அறிவுரைப்படி கூட்டணிக்காக சில கொள்கை விடயங்களில் கூட சோனியா தாரளம் காட்டிவருகிறார். விடுதலைப்புலிகளின் ஆதரவு கட்சியான ம.தி.மு.கவையும் தங்கள் கூட்டணியில் சேர்க்க அவர் தயாராகிவிட்டார்.

தற்போதுள்ள சூழ்நிலையில், காங்கிரசுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கருணாநிதி, லல்லுபிரசாத் யாதவ் உள்ளனர். முலாயம்சிங் யாதவ், சரத்பவார், மாயாவதி, சுர்ஜித் போன்றவர்கள் ஒருங்கிணைந்தால் காங்கிரஸ் கூட்டணி பெரும்பான்மையாகிவிடும்.

# ஆகாது பொறாமை

கந்தனிடம் வயல் ஒன்று இருந்தது. அவன் அதில் நெல் விதைத்திருந்தான். கந்தனுக்குப் புத்தி குறைவு. ஆனாலும், நல்லவன். கந்தனின் வீட்டிற்கு எதிர்வீட்டுக்காரன் விமலன். விமலனுக்கும் வயல் இருந்தது. ஆனால், அதில் விளைச்சல் சரியில்லை. அதனால், கந்தன் மீது அவனுக்குப் பொறாமை.



நன்றாக விளைந்திருக்கும் கந்தனின் வயலை விமலன் நிர்மூலமாக்கி அழித்துவிடவேண்டும் என்று திட்டமிட்டான்.

கடைசியாக அறுவடைசெய்யப்போகும் வயிலில் தங்கம் இருப்பதாகப் பொய் கூறுவதென முடிவெடுத்தான் கந்தனை அருகில் அழைத்தான்.

"உன் வயிலில் நெல் மிகவும் நன்றாக விளைந்திருக்கிறது போலிருக்கே. ஆனால், நீ பாவம் என்றான்." அதற்கு அப்பாவியான கந்தன். ஏன் என்று கேட்டார். நான் நேற்று ராத்திரி ஒரு கனவு கண்டேன். அதில் உன் வயிலில் தோண்டும்போது தங்கப்புதையல் இருப்பதுபோல் கண்டேன். அதனால், உடனேயே தோண்டவேண்டும். என்றான்.

'அப்படியா! தங்கப் புதையலா?" என்று வாயைப் பிளந்தான் கந்தன். உடனேயே அவனுக்குத் தங்கப் புதையலைப் பார்க்க ஆசை எழுந்தது.

ஆட்களைக் கூட்டிவந்து தன் வயலைத் தோண்ட ஆரம்பித்தான். இதனால், விளைந்திருந்த நெல் எல்லாம் பாழாயிற்று. ஆனால், அதனைப்பற்றிக் கவலைப்படாமல் கந்தன் வயலைத் தோண்டிக் கொண்டிருந்தான்.

இதைப் பார்த்த விமலன் மனதிற்குள் - 'கந்தன் சரியான அப்பாவி. நான் சொன்னதை அப்படியே நம்பிவிட்டான். நெல் லும்போய், தங்கப் புதையலும் கிடைக்காமல் திண்டாடப் போகிறான்' என மகிழ்ந்தான்.

ஆனால், கந்தனின் வயலில் இருந்து திடீரென வித்தியாசமான ஒரு சத்தம் கேட்டது. மேலும், தோண்டியபோது, ஒரு குடம் இருந்தது. அதனை வெளியே எடுத்துப் பார்த்தபோது - அது முழுவதும் தங்கக் காசுகளால் நிரப்பப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த விமலனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'பொய் சொன்னேன். ஆனால், பலித்து விட்டதே...' என அவன் திகைத்தான்.

அப்போது, அவன் மனம் மீண்டும் சிந்தித்தது. இந்தப் புதையல் கிடைக்க நானே காரணம். கந்தனை சும்மாவிடக் கூடாது என மீண்டும் அவனிடம் சென்றான் விமலன். 'கந்தா உனக்குப் புதையல் கிடைக்க நான்தான் காரணம். அதனால், கிடைத்ததில் பாதியை என்னிடம் கொடுத்துவிடவேண்டும்' என்று கேட்டான்.

'உண்மைதான் விமலன். நீ மட்டும் சொல்லியிருக்காவிட்டால், எனக்குத் தங்கப் புதையல் கிடைத்திருக்குமா? அதனால், நீ கேட்டபடியே உனக்குப் பாதியைத் தந்துவிடுகின்றேன். வைத்துக்கொள்...' என்றான். கந்தனின் இந்தப் பதில் விமலனைத் திடுக்கிட வைத்தது. இத்தகையதொரு பதிலை அவன் எதிர்பார்க்கவில்லை. கந்தன் நல்லவன். ஆதனால், அவனிற்கு நல்லதே நடக்கிறது. அதற்கு ஏற்ப அவனும் நல்லதையே நினைக்கின்றான். அதேபோல, நானும் பொறாமையைக் கைவிட்டு நல்லவனாக மாறினால், நமக்கு நல்லது நடக்கும் எனச் சிந்தித்தான்.

அடுத்த நிமிடம் முதல் விமலனின் மனதிலிருந்த பொறாமை அகன்றது. நீங்களும் நல்லதைச் சிந்தியுங்கள். பொறாமை ஆகாது சிறுவர்களே.

## விடுகதைகளும் விடைகளும்



1) ஒல்லி மனிதனுக்கு ஒற்றைக் கண் அவன்யார்?
ஊசி.
2) குட்டிக் குதிரைக்கு எண்ணூறு கடிவாளம் அது என்ன?
தறி.
3) திறக்கமுடியும் மூடமுடியாது அது என்ன?
டீகு.
4) விதையில்லாத செடி மழையில் பறந்தது, வெயிலில் காயுது அது என்ன?
காளான்.

வே.பாத்திபன்
பளை மத்திய கல்லூரி.

1) வருவது தெரியும் போவது தெரியாது அது என்ன?
புகை.
2) நெட்டி இல்லாத வட்டஇலை அது என்ன?
அப்பளம்.
3) காடு மேடெல்லாம் கிடக்கும். கால் வைத்தால் கத்த வைக்கும் அது என்ன?
முள்.
4) தொட்டாற் சுருங்கிக்கு தொண்ணூறு கால் அது என்ன?
அட்டை.
5) வெட்டி வெட்டித் தெரியும் எங்கள் வீட்டு விளக்கு அது என்ன?
மின்னல்.

ச.சுவேந்தன்
பளை மத்திய கல்லூரி.

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

ஒருவர் ஒரு நிறுவனத்தில் 30 நாட்கள் வேலை செய்ய ஒப்புக்கொண்டார். இவர் வேலைக்குச் செல்லும் ஒவ்வொருநாளுக்கும் கூலி 18 ரூபா. இவர் வேலைக்குச் செல்லாத ஒவ்வொரு நாளுக்கும் நிறுவனத்திற்கு அபராதமாக 15 ரூபா கட்டவேண்டும். இந்த அடிப்படையில் இவர் சம்பாதித்த மொத்தக் கூலிப் பணம் 276 ரூபா. அப்படியெனின் இவர் எத்தனை நாள் வேலைக்குச் சென்றார்.

கணக்குப்போட்டுப் பாருங்கள்
விடை அடுத்தவாரம்

சென்றவார விடை. ஆண்கள் - 03 பேர். பெண்கள் - 04 பேர்.

இங்கே மடிக்கவும்



## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

# நேபாளம்

தலைநகர் - காத்மண்டு
மொழி - நேபாளி, மைதிலி, போஜ்புரி
சமயம் - இந்துமதம் (அரசமதம்), பௌத்தம், இஸ்லாம்.
நாணயம் - நேபாள ரூபா
முக்கியநகரம் - காத்மண்டு, நாம்ஜீ, பஜார், பதன் லூம்பினி
ஆயுள் - ஆண் - 60, பெண் - 60
மன்னர் - ஜியானேந்திரா



இது ஒரு தென்மத்திய ஆசிய நாடு. நாட்டின் சுமார் 80 வீத பரப்பும் இமாலய மலைத் தொடர்கள் மற்றும் சமவெளிகள் போன்றவற்றைக் கொண்டுள்ளது. உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரம் (8.848 மீ.உயரம்) நேபாள - திபெத் எல்லையிலேயே அமைந்துள்ளது. நீண்ட காலமாக இந்த நாடு மன்னர் ஆட்சியின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. உலகின் வறிய நாடுகளில் நேபாளமும் ஒன்றாகக் கருதப்படுகிறது.




இந்த நாட்டின் மன்னர் ஆட்சி குறிப்பிட்ட ஒரு பரம்பரையினரால் தொடரப்படுகின்றது. உலகின் அதி உயர்ந்த மலை இங்கு காணப்படுவதால், மலை ஏறுபவர்களுக்கும், உல்லாசப் பயணிகளுக்கும் சொர்க்க பூமியாகக் காணப்படுகின்றது. இந்து, பௌத்தம் ஆகிய மதங்களுக்கு இந்த நாட்டில் தனியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. விவசாயமே இந்த நாட்டின் முக்கிய தொழிலாகக் காணப்படுகின்றது.

**முக்கிய உற்பத்திகள்** - விவசாயம், கால்நடைகள், மக்காச்சோளம், அரிசி, எண்ணெய் வித்துக்கள்.

**முக்கிய வருமான மூலங்கள்**- சணல், நெல், சுற்றுலா என்பன

**முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்**- மூலிகைச் செடிகள், கம்பள உற்பத்தி, ஆடை தயாரிப்பு, தோல் பொருட்கள், யூர் எனப்படும் ஒரு வகை புல்லில் இருந்து பொருட்கள் தயாரித்தல் என்பன.

## SCHOOL என்பதன் பொருள்

| | |
|---|---|
| S - Sincerity | - நேர்மை |
| C - Capacity | - திறமை |
| H - Honesty | - உண்மை பேசும் குணம் |
| O - Obedience | - கீழ்படிவு |
| O - Orderliness | - ஒழுங்கு |
| L - Learning | - கல்வி அறிவு |

தி.சாரங்கன்.



**சிந்தனைக்கு!**
அதிகம் பேசுவதைவிட அதிகம் சிந்திப்பது நன்மையானது.

# சிறுவர் அரங்கம்

அன்புச் சிறுவர்களே!

புதிய ஆண்டில், புதிய வகுப்பில் கல்வி பயில ஆயத்தம் செய்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித்தானே. புதிய வகுப்பில் நீங்கள் திறமை சாலியாக மிளிர அக்காவின் வாழ்த்துக்கள்.

சிறுவர்களே! உங்கள் திறமை - கல்வியிலும், விளையாட்டிலும் நின்று விடக்கூடாது. கலைசார்ந்த துறைகளிலும் வளர வேண்டும். கலை என்பது வாழ்வின் மிக முக்கியமான பகுதி. இதற்குள் பலவகைகள் அடங்குகின்றன. ஓவியம், கதை எழுதுதல், கவிதை எழுதுதல் இவையும் கலைதான். எனவே, மீதமாய் இருக்கும் நேரங்களில் நீங்கள் மனதில் நினைப்பதை எழுத முனையுங்கள். அவை நிச்சயம் உங்கள் மன வெளிப்பாடாக இருக்கும். அதேபோல் நிறைய வாசியுங்கள். கையில் கிடைக்கும் நல்ல விடயங்களை மனதில் போட்டுக் கொள்ளுங்கள். வாசிப்பு மனிதனைப் பூரணப் படுத்துகின்றது.

பாசமுடன் -சாரு அக்கா

## உலகில் உயரமானவை

| | |
|---|---|
| உயரமான மனிதன் - | - ஹாசி முகமது ஜின்னா<br>- உயரம் 231.7 செ.மீ. |
| உயரமான பெண் - | - அலன் (கனடா)<br>உயரம் - 231.7 செ.மீ. |
| உயரமான விலங்கு - | - ஒட்டகச்சிவிங்கி (இங்கிலாந்து)<br>- உயரம் 6.09 மீ. |
| உயரமான மரம் - | - கலிபோர்னியாவில் உள்ள சிவப்பு மரவகையைச் சார்ந்தது.<br>- உயரம் 112.1 மீற்றர். |
| உயர்ந்த நீர்வீழ்ச்சி - | - வெனிசுவெலாவிலுள்ள சல்டோ ஏஞ்சல் |
| உயர்ந்த கட்டடம் - | - சிக்காகோவிலுள்ள சியர்ஸ் டவர் (110 மாடிகள் கொண்டது) |
| உயரமான அணைக்கட்டு - | - தஜிகிஸ்தானிலுள்ள ரோகுன்ஸ்கி அணை - உயரம் 1098 அடியாகும்) |

பு.ஜனனி
தரம் - 8, கனகரத்தினம் ம.ம.வி

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- க.லிங்கப்பிரசாத்
கற்கும் பாடசாலை :-
புனித ஜோன் பொஸ்கோ
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
வானொலி கேட்டல்.



முழுப்பெயர் :- செ.வளன் நியூட்டன் துரம்
கற்கும் பாடசாலை :-
புனித பத்திரிசியார் கல்லூரி.
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
விளையாட்டு.

முழுப்பெயர் :- யோ.தனுஷா
கற்கும் பாடசாலை :-
மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், விளையாட்டு.

முழுப்பெயர் :- ச.சக்திதாயினி
கற்கும் பாடசாலை :-
ஸ்கந்தவரோதயா கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், விளையாட்டு,
நடனம்.

முழுப்பெயர் :- எம்.ஏ.செபஸ்ரியன்
கற்கும் பாடசாலை :-
சென். பற்றிஸ் கல்லூரி
தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், கதைப்புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர் :- இ.மரியஉஷாந்தினி
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- ம.அனுஷன்
கற்கும் பாடசாலை :-
குடத்தனை அ.மி.த.பாடசாலை
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்,
முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர் :- பே.விசாகேசன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைகள், புத்தகங்கள்
வாசித்தல்.

முழுப்பெயர் :- த.ஜனனி
கற்கும் பாடசாலை :-
சேர்.வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வி.
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், கதைப்புத்தகம் வாசித்தல்,
விளையாட்டு.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................
பிறந்த திகதி :....................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................

.................. ..................
திகதி ஒப்பம்

.................. ..................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்



# My Self

My name is Ragojan. I am eleven years old. I live in Jaffna. I am in year 6, at the Jaffna Hindu College. My Favourite Subject is mathematics. I like to play Cricket and Foot ball. My hobby is collecting stamps. My Father's name is Logeswaran. He is a business man. My mother's name is Sasik alarani. She is a house wife. I have three sisters. Tow sisters are studying at Chundikuli girls College, other sister is studying at Jaffna Hindu Ladies Primary School. My future plan is to become a doctor one day.

- L.Rogojan.

# உங்கள் கைவண்ணம்



இ.நிரோசினி
தரம் - 11
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.



ஆர்.தேனுகா
தரம் 10,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# விளையாடுவோம் - விந்தையாக



வாய் குறுகலான போத்தல் ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். அதனமேல் நீளவாக்கிலுள்ள கடதாசி ஒன்றை வைத்து விடுங்கள். கடதாசிமேல் நாணயத்தை வைக்கவும். இப்பொழுது வேகமாக கடதாசியை இழுத்துவிடுங்கள். கடதாசி கையில் வர, நாணயம் போத்தலுக்குள் விழுந்துவிடுகிறது அல்லவா?

**காரணம் என்ன?**

கடதாசியைச் சுண்டும்போது நாணயம் கீழே விழும் என்றுதான் நினைப்போம். மாறாக நாணயம் போத்தலுக்குள் விழுவது ஏன்? நாம் சுண்டும்போது விசை கடதாசியை மட்டுமே செயற்படுத்துகிறது. விசை நாணயத்தின்மீது செயற்படவில்லை. எனவே, விசையால் உந்தப்பட்ட காகிதம் பறக்கிறது. நாணயம் கீழே போத்தலுக்குள் விழுந்து விடுகிறது.

# கண்டுபிடியுங்கள்

இடதுபக்க அம்புக்குறி வழியாக மூளைக்குள் நுழையுங்கள். வலதுபக்க அம்புக்குறி வழியாக வெளியே வரவேண்டும். அம்புக்குறிகள் காட்டும் திசை வழியாகப் பயணம் செயயலாம். 'X' என்று காட்டப்பட்டிருக்கும் இடங்களில் தொடர்ந்து செல்ல வழி கிடையாது. இது நமது மூளையைப் போலவே சிக்கலான புதிர் தான். கொஞ்சம் பொறுமையாக விளையாடினால் வெற்றி உங்கள் மூளைக்கே.



# சந்தேகம் - விளக்கம்

ஒரு நோயாளிக்குக் "கோமா" எவ்வாறு உண்டாகின்றது?



ஒருவர் மயக்கநிலையில் உள்ளார் என வைத்துக்கொள்வோம். அவர் பெயரைச் சொல்லி அழைத்துப் பார்க்கின்றோம். அடித்துப் பார்க்கின்றோம். அவர் விழித்துப்பார்க்கவில்லை. இப்படியான எந்தவொரு புறத் தூண்டிலின் மூலமும் ஒருவரை விழிப்படையச் செய்ய இயலாத அளவிற்கு அவர் சுயநினைவு இழந்து இருப்பாரென்றால் - அந்த நிலையை "ஆழ் நிலைமயக்கம்" (**Coma**) என்கின்றோம். இது ஒரு மோசமான மயக்கநிலை. உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற மயக்கநிலை. இதற்கு அடிப்படைக் காரணம் - மூளையிலுள்ள 'சுயநினைவுப் பகுதி' செயலிழந்து விடுவதுதான். மூளையின் ஒவ்வொரு செயலிற்கும் ஒவ்வொரு பகுதி பொறுப்பு. ஏதாவது ஒரு காரணத்தால் சுயநினைவுப் பகுதி செயலற்றுவிட்டால், அப்போது ஆழ்நிலை மயக்கம் ஏற்படும். தலையில் அடிபடும்போது மூளைக்குள் இரத்தநாளங்கள் சிதைவடைந்து விடலாம். இதனால், மூளை அணுக்களுக்குத் தேவையான இரத்தம் கிடைக்காமல் அவை செயலற்றுப் போகலாம்.

சில சமயங்களில் மூளை அணுக்கள் இறந்தும்விடலாம்.

சிலருக்குத் தலையில் அடிபடும்போது கபால எலும்பு முறிந்து மூளைத் திசுக்களைக் கிழித்து சிதைத்துவிடலாம். இதனால், மூளை செயலிழக்கும், சர்க்கரை (நீரிழிவு) அதிகரித்தாலும் மூளை செயலிழக்கும் - அப்போதும் கோமா ஏற்படும். போதை மருந்துகளை உட்கொள்வதாலும் ஆழ்நிலை மயக்கமான "கோமா" ஏற்படும்.

# சர்வதேச குறியீடுகள்

| | |
|---|---|
| ஒலிவ் மரத்தின் இலை | - சமாதானம். |
| வெண்புறா | - சமாதானம். |
| சக்கரம் | - வளர்ச்சியைக் குறிக்கும். |
| தாமரை | - பண்பாடு, நாகரிகம். |
| கையில், சட்டையில் கறுப்புத்துணி | - துக்கம். |
| கறுப்புக் கொடி | - எதிர்ப்பு. |
| எலும்பு நடுவில் மண்டையோடு | - ஆபத்து. |
| சிவப்பு விளக்கு | - ஆபத்து, நிறுத்து. |
| செஞ்சிலுவை | - மருத்துவமனை, செஞ்சிலுவைச் சங்கம். |
| சிவப்பு முக்கோணம் | - குடும்பக் கட்டுப்பாடு. |

ச.மஞ்சுகி
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

## ஏ-9 வீதியில் புதிய கட்டடங்களை அமைக்கமுன்

# வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி பெறுவது அவசியம்!

யாழ்.நகரிலிருந்து முகமாலை வரையிலான ஏ-9 வீதி அகலமாக்கப்படவுள்ளமையால், இந்த வீதி ஓரத்தில் வசிப்போர் புதிதாகக் கட்டடம், மதில்களை அமைக்கும்முன், தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்.பிராந்திய பிரதம பொறியியலாளர் வி.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாரிய பணிகள் குறித்துக்கேட்டபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது-

யாழ்.மாவட்டத்திலுள்ள மிகமுக்கியமான நீண்ட பாதை ஏ-9 வீதியாகும். இதன் அளவு சர்வதேச விதிகளுக்கு அமைவாக இல்லாததால், அதனை மீள நிர்மாணிக்கவேண்டியநிலை உருவாகியுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான எமது பாரிய வேலைத் திட்டமாக - இந்த வீதியின் அபிவிருத்தியே உள்ளது.

இந்த வீதி தற்போது 12 தொடக்கம் 15 மீற்றர் வரையிலான அகலத்தைக் கொண்டதாக அமைந்திருக்கின்றது. எனினும், இது 17 மீற்றருக்கும் அதிகமான அகலத்தைக் கொண்டிருத்தல்வேண்டும்.

இதற்கமைவாகவே - அடுத்த ஆண்டு ஏ-9 வீதியின் இரு மருங்கிலுமுள்ள கட்டடங்கள், மரங்கள் முதலானவை அகற்றப்பட்டு, வீதியும் அகலமாக்கப்படவுள்ளது.

இதனால், இந்த வீதியோரமாக யாராவது புதிதாக கட்டடங்களையோ, மதில்களையோ கட்ட விரும்பினால் எம்முடன் தொடர்புகொண்டு, சரியான அளவைப் பெற்ற பின்னரே அதற்கான பணியை மேற்கொள்ளுதல் வேண்டும். இதனூடாக வீண் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

இதற்கு மக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பினை எமக்கு வழங்குதல்வேண்டும் எனவும் அவர மேலும் தெரிவித்தார். (ப)



நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்ற திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகத்தின் திருமுறைத்தேனமுது வரிசையில் மூவர் தேவாரங்கள் ஒலிப்பேழை, ஒலித்தட்டு வெளியீட்டு விழாவில் கந்தர் மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தின் பீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்த வேள் சுவாமிகள் ஆசியுரை வழங்குவதையும், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரவு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

## நெடுந்தீவுப் பிரதேசத்தின்

# 2004 துரித அபிவிருத்தித்திட்ட ஆலோசனை பெறும் கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட துரித அபிவிருத்தித்திட்டம் 2004 ஆம் ஆண்டுக்கான திட்ட ஆலோசனைகளைப் பெறும் கூட்டம் எதிர்வரும் 07 ஆம் திகதி காலை 10 மணிக்கு பணிமனை செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இடம்பெயர்ந்த, மீளக்குடியமர்ந்த மக்களின் அவசியதேவைகளை இனங்காணுதல், அவற்றை ஈடுசெய்வதன் மூலம், அவர்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவும், அவர்களினது உடனடி கஷ்ட நிலையை நீக்கவும், கூடிய அபிவிருத்தித்திட்ட ஆலோசனைகள் இந்தக் கூட்டத்தில் பெறப்படவுள்ளன.

நெடுந்தீவிலுள்ள சகல பொது நிறுவனங்களும், அமைப்புக்களுக்கும இது தொடர்பான அறிவித்தல்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக, நெடுந்தீவு அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் தெரிவித்துள்ளதுடன், அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

# குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் யாழ்.படைத்தளபதி விஜயம்!

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி சுசில் சந்திரபால - புதுவருடத்தை முன்னிட்டு யாழ்.சத்திரச்சந்தி வைரவர் கோவிலில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார். நேற்றுமுன்தினம் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பூசை வழிபாடுகளில் - இராணுவத் தளபதியுடன், வேறுபல உயர் மட்ட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பூசை வழிபாடுகளில் பங்குகொண்ட இராணுவத்தளபதி, ஆலயக்குருக்களிடம் ஆசிபெற்றதுடன், நைவேத்தியப் பொருட்களையும் பெறறுக்கொண்டார். பூசை வழிபாடுகள் நிறைவடைந்ததும், அமைச்சர் மகேஸ வரன் இராணுவத்தளபதியை பொம்மை வெளிப்பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

பொம்மை வெளிப்பகுதியில் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சால் அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகளைப் பார்வையிட்ட இராணுவத்தளபதி, அங்கிருந்த மக்களுடன் தமிழில் சரளமாக உரையாடினார். இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் தமது வீடுகளை அமைப்பதற்குவேண்டிய மணலைப் பெற்றுக்கொள்வது கடினமாகவுள்ளதாகவும், அதிகவிலை கொடுத்தே மணலை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது எனவும் பொது மக்கள் இராணுவத்தளபதியிடம் எடுத்துக்கூறினர்.

இதனைச் செவிமடுத்த இராணுவத்தளபதி - வீட்டுத்திட்டங்களுக்கான மணலை இராணுவத்தினர் மூலம் இலகுவாக பெற்றுத்தர, தான் நடவடிக்கை எடுப்பதாக பொது மக்களிடம் உறுதியளித்தார். பொம்மை வெளிப்பகுதியைப் பார்வையிட்ட பின்னர், இராணுவத்தளபதி கல்லுண்டாய் பகுதிக்குச்சென்று, அங்கு அமைக்கப்பட்டுவரும் திருவாவடுதுறை கிராமியத்திட்டத்தையும் பார்வையிட்டார்.

கல்லுண்டாய்ப் பகுதி மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாடுகள் காரணமாகத் தாம் மலசலகூட வசதிகள் எதுவுமற்று அல்லற்படுவதாகவும், இந்தப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

அதற்கமைய - அந்தப் பகுதியிலுள்ள இராணுவமுகாம் பொறுப்பதிகாரியை அழைத்த இராணுவத்தளபதி, மக்கள் மலசலம் கழிப்பதற்கு வேண்டிய உரிய ஒழுங்குகளை உடனே செய்துகொடுக்கும்படியும்,



அவர்களுக்கு இடையூறு கொடுக்காமல் இராணுவத்தினர் நடந்து கொள்ளவேண்டுமெனவும் உத்தரவு பிறப்பித்தார்.

இந்தச் சந்திப்புக்களில் இராணுவத்தளபதி சுசில் சந்திரபாலவுடன் இராணுவ அதிகாரிகள் டுமிந்த, உடவத்த, யாழ்.பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஹெட்டி தர்மசிறி ஆகியோரும், அமைச்சர் மகேஸ்வரன், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் சிவபாதம் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மரவேலைப் பயிற்சி போதனாசிரியர் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தொழிற்துறை திணைக்களத்தின் கீழ் இயங்கும் மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்கு போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மானிப்பாய் பகுதியில் இயங்கிவரும் இந்தப் பாடசாலைக்கு தற்காலிக பயிலுநர் அடிப்படையிலேயே போதனாசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் தொழிற்துறைத் திணைக்கள அதிகாரி ச.இராகவன் தெரிவித்தார்.

தகுதியானவர்கள் தமது விண்ணப்பங்களைத் தொழிற்துறைத் திணைக்களம், யாழ்.மாவட்டச் செயலகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், நேர்முகப்பரீட்சை ஒன்றின்மூலம் விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சாரணர் இயக்கத்தில்

# திறமையாக செயற்படும் மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைவார்கள்

## வடக்கு - கிழக்கு மாகாண சாரணர் பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

சாரணர் இயக்க நடவடிக்கைகளில் திறமையாக ஈடுபடும் மாணவர்கள் - நிச்சயமாக வாழ்க்கையில் வெற்றியடைவர். அவர்கள் நாட்டின் சுபீட்சத்துக்கும் முக்கிய பங்களிக்க முடியும்.

இவ்வாறு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர், பெற்றோர் மாலை வேளை நிகழ்வில் உரையாற்றிய வட - கிழக்கு மாகாண சாரணப் பிரதிப் பயிற்சிப் பணிப்பாளர் கே.செலவநாயகம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது -

சாரணருடைய நடவடிக்கைகள் - மாணவர்கள் மத்தியில் நற்பழக்கங்களை வளர்த்து, அவர்களைத் திறமை மிக்கவர்களாக உருவாக்குகின்றது. இந்த மாவட்டத்தில் சாரணர் நடவடிக்கைகள் செயலிழந்திருந்தது என்பது கவலைக் குரிய விடயமாகும். இன்றைய மாணவர்கள் - எதிர்காலத் தலைவர்களுக்கு சாரணர் நடவடிக்கைகள் மிக இன்றியமையாதவையாகும்.

இவை மாணவர்களிடம் நற்பழக்கவழக்கங்களை வளர்த்து, எதிர்காலத்தில் இந்த நாட்டின் நற்பிரஜைகளாகத் திகழ வழிபாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

ஈடுபடும் மாணவர்கள் நிச்சயமாக வாழ்க்கையில் வெற்றிபெறுவார்கள். அவர்களினால் நாட்டின் சுபீட்சத்துக்கும் முக்கிய பங்களிக்க முடியும்.

பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமி பேசுகையில் -

பருத்தித்துறை சாரணர் மாவட்ட செயற்பாடுகள் மேலும் வலுவுடைய தாக்கப்படவேண்டும். சாரணர் சேவையின் மகத்துவத்தை மாணவர்கள் மத்தியில் மேலும் பிரபல்யப்படுத்த வேண்டும். சாரணர் வளர்ச்சிக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுப்பதற்குவேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (17)

# தங்கச்சங்கிலியைத் திருடியவர் கோப்பாய் பொலிஸாரால் கைது

தங்கச் சங்கிலி திருடியதாக ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த 29 ஆம் திகதி அதிகாலைவேளை - இருபாலை கிழக்கிலுள்ள ஜெகநாதன் உஷா என்பவரது வீட்டிலேயே இவர் திருட்டில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

அதிகாலைவேளை உறக்கத்திலிருந்த உஷா என்பவரது கழுத்தில் இருந்த 23 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு இவர் ஓடியுள்ளதாகவும். அந்தவேளை அயலவர்கள் விழித் துக்கொண்டதால், இவரை அடையாளம் கண்ட ஒருவர் இது தொடர்பாகக் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

அவரது முறைப்பாட்டை அடுத்து, திருட்டில் ஈடுபட்டதாகக் கூறி, அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி ரஞ்சன் என்பவரைக் கைதுசெய்த பொலிஸா- நேற்றுமுன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அதன்போது - நீதிவான் இ.த.விக்னராஜா சந்தேக நபரை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச)

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆன்மீக கருத்தரங்கு

(அரியாலை)

யாழ்.பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரின் ஏற்பாட்டில வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு என்ற பொருளில் மாதாந்த துறைசார் கருத்தரங்கு எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2 மணியளவில் யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை பாமினி பாஸ்கரனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த முறை உடற்கல்வித்துறை சார் கருத்தரங்கு இடம்பெறும். மேற்படி நிகழ்வில் சித்தவைத்திய கலாநிதி பிரம்ம குமாரர் சிவசுப்பிரமணியம், வயாவிளான் ம.ம.வி உடற்கல்வி ஆசிரியை பிரதீபா கிருஷ்ணபிள்ளை, யாழ்.தேசிய கல்வியற்கல்லூரி உடற்கல்வி விரிவுரையாளர் கிரிஜா கந்தசாமி ஆகியோரின் சிறப்பு சொற்பொழிவும், பிரம்ம குமாரிகளின் செயற்பாட்டுச் சொற்பொழிவும், தியானப்பயிற்சியும் இடம்பெறவுள்ளது. (55)

## மீளக்குடியமர்தோர் விபரம் சேகரிப்பு

வன்னியிலிருந்து வந்து மீளக் குடியமர்ந்த மக்களின் விபரம் - நலன்புரிநிலையங்களில் வசிப்வர்கள விபரம் மற்றும் இடம்பெயர்ந்து வசிப்பவர்களின் விபரம் என்பவற்றினை இராணுவத்தினர் சேகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

மேற்படி விபரங்களை - சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பண்டத்தரிப்பு, மானிப்பாய் இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் திரட்டி வருவதாகத் தெரியவருகிறது. (44)

## காரியாலய பெயர்ப்பலகை விஷமிகளால் நாசம்

(சுதுமலை)

சாவல்கட்டு கிராம சேவகர் பிரிவிலுள்ள நூறு வீட்டுத்திட்டத்தின் காரியாலய பெயர்ப்பலகை அண்மையில் இனந்தெரியாதவர்களினால் அடித்து நெருக்கப்பட்டு, கழற்றி எறியப்பட்டதாகத் தெரிய வருகிறது. (44)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முன்றாவது அகவையில்



பெயர் : கெ.நேருஷா
முகவரி : கோண்டாவில், திம்லையம்பதி.



# முறிகண்டியில் தொல் கல்லறைகள்

முறிகண்டி என்றதும் இப்பொழுது வடபகுதியில் கண்டி A-9 சாலையில் பயணம் செய்யும் யாவரும் அறிவது - சாலையோரத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலும், அதன முன்பாகவுள்ள கடைகளும் ஆகும.

இந்த முறிகண்டி பற்றி அறிவது, ஆராய்வது இந்த எழுத்துப் பகுதியின் நோக்கம் அல்ல. கண்டி நெடுஞ்சாலையில் இன்றுள்ள முறிகண்டி காடடிலுள்ள இதன் ஆதிமூலமான பழையமுறிகண்டி - கண்டி நெடுஞ்சாலையில் 18 ஆம் போர் ஏற்றத்தின் ஆரம்பத்திலுள்ள காட்டு முறிகண்டி என மூன்று முறிகண்டிகளில் உள்ள மூன்று பிள்ளையார் கோயில்கள் இணைப்பைக் கொண்டவை.

ஆதிமூலமாக காட்டினுள் இருக்கும் பழையமுறிகண்டிப் பிள்ளையார் கோயில் மற்றும் அதன் சூழல் வர



லாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரியது. அதை ஆராய்ந்து சிலவிடயங்களை முன்வைப்பது இதன் நோக்கமாகும். தற்போது கண்டி நெடுஞ்சாலையில் பரபரப்புடன் இருக்கும் முறிகண்டி - 'தெருமுறிகண்டி' எனக் குறிப்பிடப்படுகின்றது.

தெருவோரம் போக்குவரவு பரப்புள்ள பகுதியில் அமைந்ததால், இது தெருமுறிகண்டி எனப்பெயர் பெற்றது. அது மருவி, இன்று திருமுறிகண்டியாகிவிட்டது. கொழும்பு - யாழ். ரயில் சேவையில் திருமுறிகண்டி ரயில் நிலையம் இருந்துள்ளது. இந்தத்தெரு முறிகண்டி அருகாக மேற்கு நோக்கிச் செல்லும் பல்லவராயன் கட்டுக்கான சாலையில் 7 ஆவது மைல் தொலைவில் அக்கராயன் என்ற கிராமம் வருகின்றது. அக்கராயனில் இருந்து துணுக்காய்க்குச் செல்லும் சாலையில் 4 வது மைல் தூரம் பயணித்தால் அடர் பாலை மரக்கட்டுக்குள்ளே பழைய முறிகண்டி கிராமம் வருகின்றது.

கண்டி நெடுஞ்சாலையில் இருந்து துணுக்காய்க்குச் செல்லும் கொக்காவில்சாலையில் - மருதன்குளம் அருகாகவும், ஐயன்குளம் அருகாகவும் செல்லும்சாலைகளும் பழைய முறிகண்டியைச் சென்றடைகின்றன. பழைய முறிகண்டியில் இன்று ஒரு நடுத்தர நீர்ப்பாசனக்குளம் உளளது. சிறிய குளமாக இருந்து அது 1960 களில் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது. பழைய முறிகண்டி பிள்ளையார்கோயில் - பாலை மரங்களின் நடுவே உள்ளது. இந்தப் பழைய முறிகண்டி ஒரு தொன்மைக்கால கிராமம் என்பதற்கு இங்கு தொல்லியல் சான்றுகள் உள்ளன.

இந்தக் கிராமத்தில் பாடசாலையருகே ஒரு வளவினுள் தொல்கால நடுகற்கள் வட்டமாக நடப்பட்டு காணப்படுகின்றன. இதுவரை தொல்லியல் ஆய்வாளர்களின் கண்படாததாக இக்கற்கள் உள்ளன. சுற்று வட்டத்தில் இந்தப் பகுதியில் ஏராளமான செங்கற்களும், மட்பாண்டங்களும் கிடக்கின்றன. நடுகற்கள் கிடக்கும் இடத்தில் இப்பகுதி வாசி ஒருவர் சேவல் வடிவ செம்பு உருக்கு வடிவத்தை கண்டெடுத்துள்ளார். இதுவும் தொல்காலத்தையது ஆகும். இதேவேளை இப்பகுதியில் தொன்று தொட்டு புலவுச்செயகை என்ற வேளாண்மை மேற்கொள்ளப்பட்டு வந்தது. 1959 ஆம் ஆண்டுகளில் பழைய முறிகண்டிக்குளம் கொள்ளளவு அதிகரிக்கப்பட முன், இந்தக் குளத்தின் படுகையில் வேளாண்மை செய்யப்பட்டுள்ளது. இதனை இப்பகுதியின் மூத்தவர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

புலவுச்செய்கை எனப்படுவது - உலகின் முதலாவது வேளாண்மை செய்கை முறையாகும். புலவுச்செய்கை என்றால் என்ன? சாய்வு குறைந்த நிலப்பரப்புகளில் ஓடும் ஆறுகள் - தமது படுகையில் சில இடங்களில் சமவெளிகள் அமைகின்றன. ஆறுகளால் அடித்து வரப்படும் வளம்மிகு வண்டல்கள் இந்தச் சமவெளிகளில் படிகின்றன.

இந்த பசளை மிகுந்த வண்டல் வெளிகள் இயல்பான வேளாண் செய்கைக்கு ஏற்றதாகி, ஆறுகளில் படுகைகளாகின.

இந்த வண்டல் வெளிகளில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையே புலவுச்செய்கையாகும். வன்னியில் இன்று குளங்களாக உள்ளவை முன்னர் ஆறுகளின் வண்டல் வெளிகளாகும். இந்தக் குளங்களான வண்டல் வெளிகளில் கடைசிவரை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது பழையமுறிகண்டி குளத்திலாகும் (மன்னாரில் இன்றும் இந்த புலவுச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது).

உலகின் முதல் வேளாண் செய்கை கிராமம் என தொல்லியலாளர்களால் உறுதிசெய்யப்பட்டது பலஸ்தீனத்தின் ஜெரிக்கோவிலாகும். இந்த ஜெரிக்கோ - பலஸ்தீனத்தின் சாக்கடலின் படுகையாகும். சாக்கடல் உப்புச் செறிவுமிகுந்தது. இதில் பயிர் வளர்ச்சிக்கான உரங்கள் செறிவாக உள்ளன.

இதனாலேயே ஜெரிக்கோ என்ற உலகின் முதல் வேளாண் கிராமம் அமைந்தது. இதுவும் ஒரு புலவுச்செய்கையாகும். அதுபோலவே பழைய முறிகண்டி புலவுச்செய்கையும் - மண்டக்கல் ஆறின் படுகையில் அமைந்தது. இதில் விவசாயபடுகை தொலலியல் ஆய்வுகளை மேற்கொண்டால் - இதன் தொன்மையை உறுதி செய்யமுடியும்.

தொன்மைப்புலவுச் செய்கை மூலம் நடுகற்கள், மட்பாண்டங்கள் மூலமும் பழைய முறிகண்டியின் தொன்மையை விளங்கமுடியும். அத்துடன், இங்குள்ள பிள்ளையார் கோயிலின் தொன்மையும் ஆராயப்படவேண்டியதாகும். முறிகண்டி என்ற சொல்லை ஆராய்ந்தால் - கண்டி நீர்தேங்கும் இடத்தை குறிப்பதாகும்.

முறிகண்டி என்பது முறித்த கண்டி அல்லது உடைத்தகுளம் என்ற பொருளைப் பெறுகின்றது. இதே வேளை, இந்த பழைய முறிகண்டிக்கு அருகான அக்கராயன்குளத்துக்கு நீர்வழங்கும் வண்ணாமோட்டை ஆறு, நிலை ஆறு ஆகியவற்றுக்கு இடையே பலதொன்மைக்கால திராவிட ஈமச்சின்னங்கள், உலோக உருக்கு உலைகளின் பகுதிகளும் தொல்கால குள அணைகளின் அரு



கில் ந.குணரட்ணத்தால் கண்டு பிடிக்கப்பட்டன. கற்குவை எனப்படும் நீள்வட்டவடிவில் கற்களால் அடுக்கப்படும் 9 ஈமச்சின்னங்கள், கற்றகடு எனப்படும் சிறிய தட்டைக்கற்களால் உருவாக்கப்பட்ட ஈமச்சின்னங்களும் அத்துடன் ஏராளமான கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்களும் காணப்படுகின்றன.

மேலும் 3 அடி உயரமும், 3 அடி சுற்றளவும் கொண்ட பெரியதொரு சுடுமண் உருவமும் மணணில் புதையுண்ட நிலையில் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் - ஒரு மாலைக்குரிய வளையங்களும், செம்பு குமிழும் இந்தப்பகுதியில் எடுக்கப்பட்டன. இந்தக் குமிழும் சிவப்பு வளையங்களையும் ஒத்த சிவப்பு வளையங்களும் எகிப்திய பிரமிட்களில் எடுக்கப்பட்ட பாரோமன்னனின் மம்மியில் காணப்பட்டுள்ளது என்பது முக்கியவிடயம்.

இந்த அக்கராயன்குள ஆறுகளிடையிலான சான்றுகள் இருக்குமிடமும் பழைய முறிகண்டி சான்றுகள் இருக்குமிடமும் சுமார் ஓரிரு மைல்கள் இடைவெளியில் காணப்படுகின்றன. இந்தச் சான்றுகள் குறிப்பாக, அக்கராயன் குள அலை கரைசான்றுகள் - திராவிடர்களின் பெருங்கற்காலத்துக்குரியவை என்பதை ஏனைய பகுதிகளிலுள்ள காலக்கணிப்பு செய்யப்பட்ட சான்றுகளோடு ஒப்பிடுகையில் உறுதி செய்யமுடிகிறது. பெருங்கற்காலம் என்பது கி.மு. 2000 ஆண்டுகள் முதல் கி.மு. 3000 ஆண்டுகள் வரை நிகழ்கின்றன.

ஆயினும், இந்தச் சான்றுகளை காலக்கணிப்பினால் உறுதிசெய்வதன்மூலம், இலங்கையில் வரலாற்றில் இந்தச் சான்றுகள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி.

ஏனெனில் இத்துணை செறிவான ஈமச்சின்னங்கள் புத்தளம், பொன்பரப்பி தவிர ஏனைய பகுதிகளில் காணப்படவில்லை. இலங்கையின் மனிதகுல வாழ்வின் தொடக்கம் வரட்சிப் பகுதிகளான வன்னி, மன்னார், புத்தளம், அம்பாந்தோட்டை பகுதிகளிலேயே இருந்தன என்பதை அறிவியல் பூர்வமான தொல்லியல் ஆய்வுகள் மூலம் இலங்கை தொல்லியல் திணைக்கள முன்னாள் பணிப்பாளார் சிரான் யு.தெரணியகலை, வெளிநாட்டு தொல்லியல் ஆய்வாளர்களின் துணையோடு மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் உறுதிசெய்தார்

இப்பகுதியில் எடுக்கப்பட்ட மனிதனின் பழைய கற்கால கல்லாயுதங்கள் - ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகள் தொன்மையானவை என்பது தெரணியகல தன் **Prehistory of Srilanka** வில் அறிவியல் பூர்வமாக உறுதிசெய்கிறார். தெரணியகலை கல்லாயுதங்கள் எடுத்த இடங்கள் அக்கராயன்குள அலை கரை, பழையமுறிகண்டியில் நீர் நிரப்பும் ஆறின் கரைகளும் ஆகும். இந்த விடயங்கள் இலங்கை வரலாறில்



பாடப் புத்தகங்களில் மறைக்கப்பட்டு, பிந்தியகால பதியகம்பளை கல்லாயுதங்களே குறிப்பிடுகின்றன. ஆகவே, அக்கராயன், பழையமுறிகண்டி சான்றுகள் - இலங்கை வரலாறில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி. வன்னி, கிளிநொச்சி, அக்கராயன்குளத்துக்கு நீர் வழங்கும் வண்ணாமோட்டை ஆறு, நிலை ஆறு ஆகியவற்றுக்கு இடையே பலதொன்மைக்கால திராவிட ஈமச்சின்னங்கள், உலோக உருக்கு உலைகளின் பகுதிகள் - தொல்கால குள அணைகளின் அருகில் ந.குணரட்ணத்தால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவை 3000 ஆண்டுகள் தொன்மையானவை என காபன் 14 காலக்கணிப்பு உறுதிசெய்துள்ளது. இதுவரை இலங்கையில் எடுக்கப்பட்ட இரும்பு உலைகள் 2700 ஆண்டுகள் தொன்மையானவை என உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

தி.தவபாலன்

# புகையும் யாழ்ப்பாணமும்

அழிவு என்பது தமிழனுக்குத் தலைவிதி ஆகிவிட்டதோ என்னவோ தெரியவில்லை? பாவம் தமிழன்! அன்றைக்கு அநியாயக் குண்டுகளாலும், இனவெறி அரக்கர்களின் ஆக்கிரமிப்பு சீண்டுதலாலும் அழிக்கப்பட்டான். ஆனால், இன்றைக்குப் புகைத்தல், மதுபோதை, கொலை, கற்பழிப்பு, கடத்தல், விபச்சாரம் போன்ற பல்வேறு கீழ்தரமான போக்குகளால் அழிந்து கொண்டிருப்பது கண்களிலிருந்து கண்ணீரை வரவழைக்கும் கவலைக்குரிய விடயமாகும்.

தமிழனின் பண்பாடும், பழம் பெருமைகளும், கொடிகட்டிப் பறந்த எங்கள் தேசத்தில், இந்தக் கீழ்தரமான போக்குகள் ஆதிக்கம் செலுத்துவதற்குத் தெளிவான அரசியல் சூழல் இன்றி நாம் குழப்பமான சூழலுக்குத் தள்ளப்பட்டு, அடக்கி ஒடுக்கியதன் விளைவாகவே இந்தக் கீழ்த்தரமான போக்குகள் - யாழ்ப்பாண சமுதாயத்தைச் சிதைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் இந்தக் கீழ்த்தரமான போக்குகளால் அழிந்து, சிதைந்துகொண்டிருக்கும் எங்கள் சமூகத்தைத் தட்டிக்கேட்டு, நல்ல வழிக்கு இட்டுச்செல்லும் வர்க்கத்தினரும், நிறுவனங்களும் கண்ணை மூடிக்கொண்டு திரிவது - வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருக்கிறது. இந்தக் கீழ்த்தரமான போக்குகளின் யாழ்ப்பாண சமுதாயத்தில் முன்னணி வகுப்பது - புகைத்தல் சாதனங்கள் என்றே கூறிவிடும் அளவிற்கு, அதன் பாவனைகள் அதிகரித்துள்ளது. இப்படிப்பட்ட இந்தப் புகைத்தல் சாதனங்கள் எங்கள் சமுதாயத்துள் கடல்மார்க்கமாகவோ, வான் மார்க்கமாகவோ, தரைமார்க்கமாகவோ (ஏ -9 பாதை) உள்நுழைவதற்கான வாய்ப்புக்கள் இருந்தபோதிலும், துருவித்துருவித் தேடும் சோதனைச் சாவடிகளையும்மீறி, இந்தச் சாதனங்கள் எவ்வாறு உள்நுழைந்தது என்பது அதிசயமாகவே உள்ளது.

நாளொருவண்ணமும், பொழுதொரு மேனியுமாக அதிகரித்துக் கொண்டுவரும் புகைத்தல் சாதனங்களே சமூகத்திலுள்ள பலதரப்பட்ட பிரிவினரும் சீண்டிக்கொண்டிருப்பதால், அதன் பக்கவிளைவுகளால் தமிழன் மடிந்தும், மடியவும் போகின்றான் என்பது உண்மை.

ஆரம்பத்தில் எங்கள் தேசத்தில் புகையிலை, சிகரட், பீடி போன்ற ஒருசில புகைத்தல் சாதனங்கள் ஆதிக்கம் செலுத்தியபோதிலும், இனறு எங்கு தயாரிக்கப்பட்டது? யார் தயாரித்தார்கள்? என்ற விபரங்கள் எவையும் தெளிவாக இல்லாத சில புகைத்தல் சாதணங்களும் எங்கள் தேசத்தில வலம்வந்துகொண்டிருக்கின்றன. அவற்றுள் சாமான் என்ற வெள்ளை நிறப்பீடிகள் முதல் இடம் பெறுகின்றன. இந்தப் பீடிகள் யாழ்ப்பாணத்துப் பீடிகளைவிட, சிகரட் போன்ற வடிவத்தைக் கொண்டதும், வெறும் ஒரு ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட்டுக்கொண்டிருப்பதால், அதிகளவு மக்கள் புகைத்துத் தள்ளுகின்றார்கள். ஆனால், இந்தப் பீடிகளில் போதைப்பொருட்கள் கலந்திருக்கலாம் என்ற சந்தேகங்களும் கிளம்பிக்கொண்டுதான் இருக்கின்றன.

இதுமட்டுமா, இல்லையில்லை - இன்னும் எத்தனைரகமான புகைத்தல் சாதணங்கள் தமிழன் நெஞ்சத்தை புண்ணாக்கிக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானில் தடைசெய்யப்பட்டதும், அங்கு பிச்சைக்காரர்கள் பயன்படுத்துவதுமான போதைப்பொருட்கள் கலக்கப்பட்ட மார்வன் சிகாஸ் எனப்படும் சிகரட்டும் இங்கே புகைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் புகைத்தல் பொருளை யாழ்.நகரப் பகுதிகளில் சில கடைகளில் விற்பனை செய்யப்படுவதனை அறிந்த புகைத்தல் மதுதடுப்பு இயக்கங்கள்- இதை நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றபோதிலும், அது எந்த அளவிற்கு வெற்றியளிக்கும் என்பதும் சந்தேகமாகவே உள்ளது.

உறவுகளைப் பிரிந்து வெளிநாட்டில் தஞ்சம் புகுந்த எம்மவர்கள் - நாட்டின் சாதகமான சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, தங்கள் உறவுக்காரர்களைப் பார்க்கவரும்போது, கையுறையாகக் கொண்டுவரும் சாதனங்களில் சிகரட்டுகளும், மதுபானங்களும்தான் என்றே கூறிவிடும் அளவிற்கு, அவர்கள் அதிகளவு இந்தக் கீழ்த்தரமான சாதனங்களைக் கொண்டு வந்து - உறவுக்காரர்களின் வாய்களில் மண்ணை அள்ளிப்போட்டு விட்டு பறந்துவிடுகிறார்கள். இதன் விளைவாகவோ என்னவோ - மல்பொறோ, பென்சன் அன்ட் ஹெட்ஸ் என்ற பல புகைத்தல் சாதனங்கள் யாழ்ப்பாணத்தவர் கைகளில் தாவி விளையாடுவதும் யாவரும் அறிந்த உண்மை.

ஒடியற்கூழுக்கும், பனாட்டுக்கும், பழங்கஞ்சிக்கும் பழக்கப்பட்ட தமிழன் - நீண்ட ஆயுளுடன், திடகாத்திரம் கொண்ட தூண்களாக விளங்கினான். ஆனால், இன்றைக்கு இந்தக் கீழ்த்தரமான போக்குக்கு பழக்கப்பட்ட தமிழனுக்கு - நீண்ட ஆயுளின திடகாத்திரமும் தூரத்துப் பச்சையாகவே தெரிகின்றது. வாழ்க்கை என்ற வட்டத்தை அவன் ஒரு கணம் சுற்றி வருவதற்கு முன்னமே, அவன் பள்ளத்தில் வீழ்ந்துவிடுகின்றான். இந்தக் கீழ்த்தரமான போக்கினால் அவன் - புற்றுநோய், சுவாசநோய், ஈரல்நோய் போன்ற பல்வேறு நோய்களுக்கு உள்ளாகி, அவனது வாழ்க்கை கோணல் மாணல் ஆவதற்கும் இந்தப் புகைத்தல் சாதனங்களும் ஒரு காரணம் என்று கூறி



விடலாம்.

இன்று புற்றுநோய் என்ற அகராதிப் பக்கங்களை ஒருகணம் புரட்டிப் பார்க்கும்போது, இதில் யாழ்ப்பாணத்தவர்கள் முதன்மை பெற்றுத் திகழ்வது கவலைக்குரிய விடயமாகும்.

அதிலும் புகைத்தல் தொடர்பு கொண்டவர்களே அதிகளவானவர்கள் என்று தரவுகள்மூலம் கண்டு கொள்ளும்போது, வேதனைமேல் வேதனையாகவே இருக்கின்றது.

மொத்தத்தில் சொல்லப்போனால், தமிழருக்கு அழிவு என்பது தொடர் கதையாகவே இருக்கின்றது என்று கூறிவிடும் அளவிற்குப் போர்க்கால சூழலில் போரால் அழிந்தான். ஆனால், இன்றைய சமாதானச் சூழலில் இந்தக் கீழ்த்தரமான போக்குகளால் தன்னைத்தானே எரிமூட்டிக்கொள்கின்றான்.

கி.கமலதாஸ்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### சமாதானத்தின் பேரால் மட்டுமே

சிறிலங்காவின் அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையானது, நாளுக்கு நாள் வெவ்வேறு வடிவம் எடுத்தபடி சிக்கலுக்கு மேல் சிக்கலாகிக் கொண்டிருக்கையில், சமாதான முன்னெடுப்புக்கள் பற்றிய பேச்சுக்கள் வெறும் பேச்சளவில், காற்றோடு கலந்து போய்க்கொண்டேயிருக்கிறது.

அதிகார மோதலில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி - பிரதமருக்கும் சமாதானத்தை முன்னெடுப்பதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் எடுத்துவருகின்றபோதிலும், இரு தரப்பினரையும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருமாறு வலியுறுத்திவருகின்ற போதிலும், அதற்கான சாத்தியக்கூறு எதுவும் தென்படாத அளவுக்கு அவர்களுக்கிடையேயான முரண்பாடுகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

ஆரம்பம் முதலே சமாதான முன்னெடுப்புகளுக்கு பல்வேறு வழிகளிலும், முட்டுக்கட்டை போடமுயன்றுவந்த ஜனாதிபதி, அது தொடர்பான பிரதமரின் - நோர்வே அரசின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகளை வார்த்தையளவில் வரவேற்பதுபோல் காட்டிக்கொண்டாலும், ஆத்மார்த்தமாக அதற்கு எதிரான மனோநிலையுடன்தான் இயங்கிவந்தார் என்பது வெளிப்படையான விடயமாகும்.

இந்த நிலையில், ஜனாதிபதியின் நடவடிக்கைகளின் எதிரொலியாக சிறிலங்காவின் அரச இயந்திரத்தின் இயக்கம் மந்த நிலையை அடையத் தொடங்கியதையடுத்து, பொருளாதார ரீதியில் ஏற்கனவே ஸ்திரத் தன்மையை இழந்து சர்வதேசக் கடன்களை நம்பியே காலத்தை ஓட்டிவரும் அரசிற்கு, சமாதான நகர்வின் முடக்கம் பல்வேறு வகையிலான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சூழலை உருவாக்கிவிட்டுள்ளது.

சமாதான முயற்சிகளில் - ஆரம்பத்தில் இருந்த வேகமும், அது ஏற்படுத்திய எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் - இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளை என்றுமில்லாதவகையில் டோக்கியோ மாநாட்டில் வைத்து, 450 கோடி அமெரிக்க டொலர்களை உதவியாக அளிக்கும் உத்தரவாதத்தை அளிக்க வைத்தது.

அதாவது, சமாதான நகர்வுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே இந்தத் தொகையை வழங்கமுடியும் என்ற நிபந்தனையும் அந்த மாநாட்டில் விதிக்கப்பட்டது.

இது ரணில் அரசுக்கு கிடைத்த பெருவெற்றியாகவும் பிரசாரப்படுத்தப்பட்டது.

இந்த நிதியுதவியை அடிப்படையாகக் கொண்டு, அரசு தீட்டிய திட்டங்கள் ஏராளமாகும். ஆரம்பித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் அநேகம் ஆனால், அனைத்து திட்டங்கள் நடவடிக்கைகள் யாவும் இப்போது பின்னடைவைக் கண்டுள்ள சமாதான நகர்வுகளை அடுத்து, முன்னெடுக்கமுடியாது போயுள்ளன.

இந்தநிலையில், ஜனாதிபதியோ மீண்டும் பாதுகாப்பு அமைச்சினை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டதையடுத்து, பல கோடிரூபாய் பெறுமதியான ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சிகளில் நாட்டின் பாதுகாப்பினைக் காரணம்காட்டி, தீவிரமாக முனைந்துள்ளார்.

ஏற்கனவே தனது நிறைவேற்று அதிகாரத்தினால் சமாதான முன்னெடுப்புகளை முட்டுக்கட்டை நிலைக்கு தள்ளிவிட்ட ஜனாதிபதி - இந்த இராணுவ பலத்தை அதிகரிக்கும் முயற்சிகளின் மூலம் சமாதானத்தின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கிவிட்டுள்ளதுடன், ரணிலின் அரசை செயலற்ற நிலைக்கு முடக்கியும் விட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களின் முன்னர், அரசியல் குழப்ப நிலைக்குள்ளும் ரணிலின் அரசு சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தில்கூட, பாதுகாப்பு செலவினத்திற்கு 5000 இற்கும் அதிகமான கோடி ரூபாய்களை ஒதுக்கியதன் மூலம் சமாதானத்திற்கான அச்சுறுத்தலை ரணிலும் தன்பங்கிற்கு மறைமுகமாக செய்திருந்தார் என்றே கூறவேண்டும்.

இப்போது வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் நாடாளுமன்றத்தினால், அங்கீகரிக்கப்பட்டுவிட்ட நிலையில் வழங்குவதற்கான நிதிபற்றிய பிரச்சினை எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரோக்கியோ மாநாட்டில் வழங்குவதற்கென உறுதி அளிக்கப்பட்ட நிதியைப் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவையை அரசு உணர்ந்துள்ளது. சமாதானம் குறித்த நிபந்தனையுடன் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியுதவியை சமாதான முன்னெடுப்புக்கள் ஓரங்கட்டப்பட்டுவிட்ட நிலையில், எப்படிப் பெற்றுக்கொள்வது என்பதே அரசின் இன்றைய கவலையாகவுள்ளது.

சமாதானத்தைக் காட்டிப் பெறமுயன்ற கடனை, சமாதானம் முடங்கிக் கிடக்கும் நிலையில் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டங்கள் கிடப்பில் கிடப்பதைக் காட்டி பெற்றுக்கொள்ளும் முயற்சியில் அரசு முனைந்துள்ளதாகத் தெரிகிறது.

ஏற்கனவே, கொழும்பில் அதிகாரத் தலைமைகளுக்கிடையில் இணக்கப்பாடு ஏற்பட்டு, அரசியல் நெருக்கடி தீர்ந்தாலேயன்றி சமாதான முயற்சிகளில் இருந்து தற்காலிகமாக விலகியிருக்கும் நோர்வேயின் ஊடாக, உறுதியளிக்கப்பட்ட கடனை பெற முயற்சிகள் நடைபெறுகின்றன.

அரசின் கோரிக்கைக்கு சர்வதேசம் இணங்கி, விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு, கடன் நிதியை வழங்க முன்வந்தால், அது நிபந்தனைகளை மீறிய சமாதான எதிர்ப்புச் செயற்பாடாகவே கருதப்படமுடியும். சமாதானம் ஓரங்கட்டப்பட்டநிலையில், அரசுக்கு வழங்கப்படும் நிதி - வடக்கு - கிழக்கு மக்களின் அபிவிருத்திக்கோ, புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கோ நிச்சயமாகப் பயன்படப்போவதில்லை. இது வரலாறு தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ள அனுபவப் பாடமாகும்.

இதனைக் கடன் வழங்கும் நாடுகளும் சர்வதேச நாணய நிதியமும் கவனத்தில் கொள்வது அவசியமானதாகும்.

## நாடும் நடப்பும்

செய்தி:- மதவாதம் தலைதூக்கும் அபாயம்.




# வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடந்த வருடம் 55.5 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

கடந்த வருடம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு - வீதிப் பராமரிப்பு, புனரமைப்பு வேலைகளுக்கென 55.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதியில் 23.5 மில்லியன் ரூபா பழைய வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டதாகும்.

ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையின் பெரும்பகுதி புனரமைப்பு வேலைகளுக்காகத் கடந்த வருடம் செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு 510 கிலோமீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும், இவற்றில் ஏ தர வீதிகளின் நீளம் 280 கிலோமீற்றர் எனவும், பி தர வீதிகளின் நீளம் 230 கிலோமீற்றர் எனவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட முக்கிய வேலைத்திட்டங்களில் கொடிகாமம் நகரப்பகுதியும், பஸ்நிலையப் பகுதியும், நெல்லியடி பஸ்நிலையப் பகுதியும், நகரப்பகுதியும் மற்றும் அரியாலையில் 1 கிலோமீற்றர் நீளமான வீதியும் முற்றாகப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஏனைய வீதிகளில் பள்ளங்கள் செப்பனிடப்பட்டதாகவும், மறுபடி தார் ஊற்றும் வேலைகளும் சில இடங்களில் மேற்கொள்ளப்பட்டதாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதியைவிட இந்த வருடம் வடபகுதி வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கெனக் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

# இவ்வாண்டு நிவாரண விநியோகம் ஒழுங்கான முறையில் இடம்பெறும்

## உதவித் திட்டமிடல் அதிகாரி தெரிவிப்பு

இந்த ஆண்டுமுதல் அந்தந்த மாதத்திற்குரிய நிவாரணம், அந்தந்த மாதத்திற்குள்ளேயே வழங்கப்படவுள்ளன. அவற்றை மக்கள் அந்தந்த காலப்பகுதிக்குள்ளேயே பெற்று உதவுதல் வேண்டும் என யாழ்.செயலகத்தின் புனர்வாழ்வுக்கிளையின் உதவித்திட்டமிடல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிவாரணம் வழங்கப்படுவதில் ஏற்படும் காலதாமதங்கள் குறித்து அவரிடம் கேட்டதற்கே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டதாவது - கடந்த ஆண்டுகளில் நிவாரணம் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாகப் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டிருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு முதல் அந்தந்த மாதத்திலேயே உரியமுறையில் நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் கடந்த டிசம்பர் மாதத்திற்குரிய நிவாரணமும், இந்த மாதத்திற்குரிய நிவாரணமும் வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து பெப்ரவரி மாதம் முதல் தொடர்ச்சியாக அந்தந்த மாதத்திற்குரிய நிவாரணம் விநியோகிக்கப்படும். பொதுமக்கள் தமக்குரிய நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதில் அக்கறையுடன் செயற்படல் வேண்டும்.

ஒரு மாதத்திற்குரிய நிவாரணத்தினை உரிய மாதத்தில் பெறாது விடுவதன்மூலம், நிவாரணங்களை விநியோகிக்கும் கூட்டுறவுச் சங்கங்களையும், எம்மையும் மேலதிக வேலைப் பழுவிற்கு உள்ளாக்குகின்றது.

மிகமுக்கியமாக நிவாரணப்பொருட்களைப் பெறும் மக்களின் ஒத்துழைப்பிலேயே நிவாரண விநியோகத்தின் வேகம் தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# றிசேவ் பொலிஸாரின் சலுகைகள் பலவும் தொண்டர் படைக்கும் வழங்கப்படவேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்ப்பு

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற பிரஜைகள் தொண்டர் படையினருக்கு (சி.வி.எவ்) அவர்களது நியமனத் திகதியில் இருந்து றிசேர்வ் பொலிஸார் அனுபவிக்கும் சகல சலுகைகளும் வழங்கப்படவேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்ப்பு வழங்கியுள்ளது.

பிரஜைகள் தொண்டர் படையினரின் அமைப்பு, கடந்த 3 வருடங்களாக நடாத்திய போராட்டத்தின் பலனாகவும், இறுதியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்த வழக்கு மூலமாகவும் இந்தப் பலன் எட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதம் பிரஜைகள் அமைப்பின் செயலாளர் கொழும்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட அலுவலருடன் நடத்திய பேச்சுக்களின் பயனாகவே இந்த பலன் ஏற்பட்டுள்ளது.

றிசேர்வ் பொலிஸார் அனுபவிக்கின்ற வருடாந்த பதவி உயர்வு, ஏனைய கொடுப்பனவுகள், நிரந்தர நியமனம், இறந்தால் நஷ்டஈடு, மாதாந்த சம்பளம் என்பன இதுவரை காலமும் தொண்டர் படையினருக்கு மறுக்கப்பட்டுவந்தது.

இதனைச் சுட்டிக்காட்டி 32 படைவீரர்கள் ஒன்றிணைந்து இளைப்பாறிய ஆசிரியர்கள், ஏ.எல்.எம்.யாசின் தலைமையில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்திய அமைதிப்படை இலங்கையில் வந்திருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பிரஜைகள் தொண்டர் அமைப்பில் 24 தமிழரும், 08 முஸ்லிம்களும் உள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு இவர்களுக்கான சம்பள உயர்வை ஒரு மாத காலத்திற்குள் வழங்கவேண் டும் எனத் தீர்ப்பளித்துள்ளது.

# ஹலோட்றஸ்ரின் செயற்பாடுகள் இவ்வாண்டு மேலும் விஸ்தரிப்பு

ஹலோட்றஸ்ட் மிதிவெடியகற்றும் நிறுவன செயற்பாடுகள்-2004 ஆம் ஆண்டில் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளதாக நிறுவன வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போது 200 இற்கும் அதிகமானோர் பணியாற்றுவதாகவும், மேலும் புதிதாக 200 இற்கும் அதிகமானோர் இணைக்கப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, நவீன உபகரணங்களும் பயன்படுத்தப்படவுள்ளதுடன், தென்மராட்சிப் பகுதியிலேயே மிதிவெடியகற்றும் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (111)

## வாரநோக்கு

யாழவன்

# நடப்பதை தமக்கு சாதகமாக்க முயலும் அரசியல் தலைமைகள்



கடந்தவாரம்- சென்ற வருடத்திற்குரியதான அரைப்பகுதி நாட்களையும், புதிதாய் பிறந்திருக்கும் இந்த வருடத்திற்குரியதான அரைப்பகுதி நாட்களையும்கொண்டு கடந்திருக்கிறது. பலவித எதிர்பார்ப்புக்களை தமிழ் மக்கள் மத்தியிலே தோற்றுவித்து, அவற்றிலே பெரும்பாலானவை நிறைவேறாத நிலையில் கடந்த வருடம் ஏமாற்றமாக முடிந்திருக்கிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து நடைபெற்ற வேகத்திலேயே, ஆறு கட்டங்களைத்தாண்டி ஏழரைச்சனியன் பிடித்ததுபோல் ஏழாவது சுற்றுப்பேச்சுவார்த்தை முடங்கிப் போய்க்கிடக்கிறது. தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள், மீளவும் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலமாக தமது உரிமைப் போராட்டத்திற்கு தகுந்தபலன் கிடைக்கவேண்டும் என்பதே, புலர்ந்திருக்கும் புது ஆண்டில் அனைத்து தமிழ் மக்களினதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது யார் என்ற இழுபறிநிலைக்கு தீர்வு காண முன்னரே, புதியதொரு பிரச்சினை கடந்த வாரம் எழுந்துள்ளது. அதாவது அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிடேஜ் வெளியிட்ட கருத்து, தென்னிலங் கைக் கட்சிகளிடையேயும், அக்கட்சி தலைவர்களிடையேயும் நிலவும் அதிகாரப் போட்டியின் காரணமாக, சமாதான முன்னகர்வுகள் பாதிப்படைய ஒருபோதும் அனுமதிக்கப்படாது எனும் வகையில் அமைந்துள்ளது.

இந்தக் கருத்தை மறுத்துள்ள ஜனாதிபதி- சமாதான முயற்சிகளை தான் குழப்பவில்லையெனவும், ரணில் தலைமையிலான அரசுதான் சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லத் தயாராகவில்லையென்ற கருத்துப்பட, தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். இதிலிருந்து பார்க்கும்போது,

சமாதானத்தை முன்னகர்த்திச் செல்வது நீயா? நானா? என அரசியற் தலைமைகளிடையே முன்னர் நிலவிய சர்ச்சைகள் ஒருபுறம் கிடப்பில்போக, தற்போது சமாதானத்தைக் குழப்புவது நானா? நீயா? எனும் தர்க்கம் எழுந்துள்ளது. இது ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையாக, இருபது வருட கொடியபோரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைப் பொறுத்தவரையயில், இல்லையென்பதே வெளிப்படையான விடயமாகும். இது கடந்தவாரம் பெரும் கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்தும் விடயமாக பேசப்பட்ட வேளையில், குடாநாட்டிலும் அமைதியான முறையிலே சில சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.



சிரித்துப் பேசியே சமாளிக்க முயலும் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபால- மக்களைக் கவரும் தனது கவர்ச்சிப் பாணியிலே புதுவருட தினத்தன்றும் நடந்துகொண்டார். யாழ்ப்பாணம் சத்திரச்சந்தியிலேயுள்ள வைரவர் கோயிலிலே- புதுவருடத்தை முன்னிட்டு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளிலே கலந்துகொண்டு, மக்களோடு மக்களாய் நின்று புதுவருடத்தினத்தன்றே மக்கள் மனதை தனது பக்கம் இழுத்துக் கொள்ளும் வித்திலே ஒரு உளவியல் ரீதியான உத்தியைக் கையாண்டார்.

இந்த விடயம் சாதாரண மக்கள் மத்தியிலே பெரியதொரு ஆச்சரியத்தையும், அதிசயத்தையும் உண்டு பண்ணியுள்ளது. ஓரளவிற்கு சுசில் சந்திரபாலாவினது மட்டுமல்ல, அவரை இங்கு அனுப்பிவைத்தவர்களின் நோக்கமும் நிறைவேறத் தொடங்கியுள்ளது போலப்படுகிறது.

வவுனியா மாவட்ட கட்டளைத்தளபதியாக இதுவரை காலமும் பணியாற்றிய சந்திரபால, அங்கிருந்து விடைபெற்றுச்செல்லும்போது வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்திற்குச்சென்று, அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனுடன் நட்புணர்வோடு உரையாடி விடைபெற்றமையும், நட்புணர்வுக்கு சான்றாக புலிச்சின்னம் பொறித்த நினைவுப் பரிசொன்றைப் பெற்றுக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வுகளை எடைபோட்டுப்பார்த்தபோது, யாழ்ப்பாணம் வந்தவுடன் பதவியேற்பிற்குப் பின் சந்திரபால சந்திக்கும் முதல் பிரமுகர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறையினராகத்தான் இருப்பார்கள் எனப் பலரும் எதிர்பார்த்ததும் இயல்பானதேயாகும். ஆனால், அந்த எதிர்பார்ப்பு இதுவரை நிறைவேறவில்லை.

பதவியேற்ற பின்னர் மூன்று தடவைகளுக்கு மேல் நகரப்பகுதிக்கு வந்து, அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சில பொது மக்களைச் சந்தித்து, பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடிய தளபதி - விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்திக்க இதுவரை முயற்சிக்கவில்லை.

இந்த விடயமானது, எமது மனதிலே வித்தியாசமான எண்ண அலைகளைத் தோற்றுவித்துள்ளன. அதாவது, பொதுமக்களையும் அவர்களின் பிரதிநிதிகளாகிய அதிகாரிகள் சிலரையும் தானாகவே சந்தித்து கலந்துரையாடிய தளபதி, எந்தநேரமும் தன்னோடு பொதுமக்கள் தொடர்புகொள்ளலாம் என்று தெரிவித்தவர் - இராணுவத்தினரின் அடக்குமுறைகளை தன்னிடம் முறையிட்டால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தவர் - ஏன் இதுவரை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கவில்லை?

மக்கள் மத்தியிலே தனக்கு ஒரு ஆதரவு அலையைத் தோற்றுவித்து, அதன் மூலமாக விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்த முயல்கிறாரா? இராணுவத்தினால் எமக்கு பிரச்சினையில்லை. அவர்கள் நல்லவர்கள் என்ற மனப்பதிவை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி, மக்களின் மனங்களிலே சரிந்துபோயுள்ள படையினரின் மரியாதையை தூக்கிநிறுத்த முயல்கிறாரா? என ஒன்றன்பின் ஒன்றாக பல கேள்விகள் எழுகின்றன.

குடாநாட்டிலுள்ள ஐந்து லட்சம் மக்களையும், ஐம்பதினாயிரம் இராணுவத்தினரையும் பாதுகாக்க வேண்டியது தனது கடமையென சொன்ன தளபதியின் கூற்று, சிலருக்கு திருப்தியையும் ஒருவகை மனமகிழ்வையும் ஏற்படுத்தினாலும், இந்த நயமான கூற்றுக்குப் பின்னாலுள்ள மறைமுக அர்த்தம் ஆழமானதொரு உண்மையை வெளிப்படுத்தத் தவறவில்லை.

இதுவரை காலமும் குடாநாட்டிலே நாற்பதினாயிரத்துக்கு உட்பட்ட இராணுவத்தினரே உள்ளார்கள் என எண்ணிவந்த அரசியல் அவதானிகள் மற்றும் இராணுவ ஆய்வாளர்களின் கருத்து தவறானதாக மாறியுள்ளது. குடாநாட்டிலேயுள்ள முப்படைகளுக்கும் பொறுப்பான தளபதியே கூறுகிறார். ஐம்பதினாயிரம் இராணுவத்தினர் தற்போது குடாநாட்டிலே உள்ளதாக. எனவே எண்ணிக்கை மாறுபட பெரும்பாலும் வாய்ப்பில்லை.

பத்துத் தமிழ்ப் பொதுமக்களுக்கு ஒரு இராணுவ சிப்பாய் என்ற வகையிலே குடாநாட்டிலே படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இந்த விகிதமானது - அச்சவுணர்வையும் அதற்கும் மேலால் அழுத்தமான சில உண்மைகளையும் புலப்படுத்தி நிற்கின்றது. நாளை சமாதான நகர்வுகள் குழப்பத்தில் முடிந்து, மீண்டுமோர் யுத்தம் வெடிக்குமாக இருந்தால், நிலைமை விபரீதமாக அமையும் வாய்ப்புண்டல்லவா?

புதுவருட கொண்டாட்டத்திற்காக நகருக்கு வந்த தளபதி - அமைச்சர் மகேஸ்வரனின் அழைப்பிற்காக கல்லுண்டாய், பொம்மைவெளி ஆகிய பிரதேசங்களிலுள்ள பொதுமக்களையும் சென்று பார்வையிட்டுள்ளார். அவர்களோடு தமிழிலே உரையாடி குறைகளையும் கேட்டறிந்துள்ளார். முன்னாள் தளபதி சரத்பொன்சேகா பதவியிலிருந்த பல வருட காலப்பகுதியிலே, ஒரு தடவைகூட செய்யத்துணியாத செயலைப் புதிய தளபதி செய்திருக்கிறார். இந்தப் பரிவும் அக்கறையும் நிஜமாக இருக்க வேண்டும் - வெறும் நிழலாக இருக்கக்கூடாது என்பதே அனைவரது விருப்புமாகும்.

இதேவேளை, கடந்தவாரம் பலாலி இராணுவ தலைமையகத்திலிருந்து, அறிவிப்பொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயுள்ள அறுநூறு மீற்றர் தூரத்திற்குள் பொதுமக்கள் மீளக்குடியமரமுடியும் என்பதே அவ்வறிவிப்பாகும். இந்த அறிவிப்பானது, சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக வெளியிடப்படாமல், பூரண இதய சுத்தியோடு வெளியிடப்பட்டதாக இருந்தால் அதனை நல்லதொரு மாற்றத்திற்கான அறிகுறியாக எடுத்துக்கொள்ளலாம்.

ஏன் இவ்வாறானதொரு ஐயவுணர்வு எழுகின்றதெனில், முன்னர் படையினரால் விடுவிக்கப்பட்ட அறுநூறு மீற்றர் தூரத்திற்குள்ளான பகுதியிலேயே, மக்கள் நிம்மதியாக மீளக்குடியேற முடியாதுள்ளது. மீள்குடியேறும் நோக்கில் இப்பகுதிகளில் கட்டப்பட்ட வீடுகளையே உடைத்துத் தள்ளும்படி படையினர் விடாப்பிடியாகவுள்ளனர். அச்சுவேலி- வளலாய் பகுதியிலே இவ்வாறானதொரு அறுநூறு மீற்றர் தூரத்திற்குள்ளே குடியேறிய முந்நூற்று அறுபது குடும்பங்கள் பல இடர்களைத் தற்போது சந்தித்துவருகின்றனர். நான்குபேர் சேர்ந்து நின்று கதைப்பதற்கே படையினர் அனுமதிப்பதில்லை. அவர்கள் சேர்ந்து நின்று பலாலியைத் தாக்க திட்டமிடலாம் என படையினருக்கு உள்ளார பயம். இந்த நிலையில் அங்கு சனசமூக நிலைய நிர்வாக கூட்டங்களையோ, ஆலய நிர்வாக கூட்டங்களையோ எவ்வாறு கூட்டுவது? அதன்மூலமாகப் புனரமைப்பு வேலைகளை எவ்வாறு மேற்கொள்வது? இது தீர்வு காணப்படவேண்டிய முக்கிய விடயமல்லவா?

இந்தப் பகுதிக்குச் சென்ற அரச சார்பற்ற சில உதவி நிறுவனங்களும் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். 15 வீடுகளைக் கட்டிக்கொடுக்கச்சென்ற ஜீ.ரி.இசற் நிறுவனம் படையினர் அனுமதிவழங்க மறுத்தமையினால் தனது திட்டத்தை கைவிட்டுள்ளது.

விவசாயிகளை இணைத்து, அவர்களுக்கு விதை, தானியங்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்கச்சென்ற கெயர் நிறுவனமும் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிலையில், எவ்வாறு அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு மக்கள் தமது வாழ்வாதாரத்தைப் பலப்படுத்திக்கொள்வது? இது தொடர்பாக இராணுவத்தளபதி சந்திரபால அக்கறை எடுத்துச்செயற்படுவாராக இருந்தால், அது பெரியவிடயமாக இருக்கும். ஆனால், அதெல்லாம் சாத்தியமாகுமா?

அரசு வட பகுதி நலன்களைக் கவனிக்க தவறுமிடத்து, கடந்தவருட இறுதிநாள் அமைச்சர் பதவியில் இருந்து விலகப்போவதாக அறிக்கைவிட்டிருந்தார். அதனை மக்கள் பெரிதாக நினைவிருத்தாவிட்டாலும், சில ஊடகங்கள் அடிக்கடி அமைச்சருக்கு அதனை ஞாபகமூட்டிய வண்ணமிருந்தன.

முன்னரும் சில தடவைகள் இவ்வாறு மகேஸ்வரன் அறிக்கை வீராப்புக்களை பேசியது சிலருக்கு நினைவிருக்கலாம். எதைவைத்து இம்முறை தப்பிக்கொள்வது எனத் தவித்த மகேஸ்வரனுக்கு சோளப் பொரி போலக் கிடைத்தது, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பேர்னாண்டோவின் வருகை.

ஒஸ்ரின் தலைமையிலான சில அதிகாரிகள் குழு, கடந்தவார நடுப்பகுதியிலே யாழ்ப்பாணத்துக்கு வந்து குடாநாட்டிலே மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளது. இரு மணிநேரமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில்- பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டாலும், அது குறித்து உளர்ஜிதமான முறையிலே எவ்வித செய்தியும் வெளியிடப்படவில்லை.

ஓரிரு வாரங்களுக்கு முன்னர் இணையத்தளமொன்று அரச அதிபரின் கருத்தாக யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு அரசு எதுவித நிதி ஒதுக்கீடுகளையும் உரியமுறையில் செய்யவில்லையென ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. குடாநாட்டு பத்திரிகைகள் சிலவும் இதனை பிரசுரித்திருந்தன. ஆனால், இந்தச் செய்தி உயர்மட்டத்திற்குச்சென்று, தற்போது அரச அதிபர் மீது சில அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக அறியமுடிகிறது.

இந்த நிலையில் ஒஸ்ரின் தலைமையிலான குழுவும் இங்குவந்து, தனியே அரச அதிபரையும், மாவட்ட திட்டப் பணிப்பாளரையும் மட்டுமே சந்தித்துள்ளது. இந்தச் சந்திப்பிலே அரசாங்க அதிபர்கூட கலந்துகொள்ளவில்லை. ஊடகவியலாளர் எவரும் புகைப்படம் எடுக்கக்கூட அனுமதிக்கப்படாத நிலையிலே மூடிய அறைக்குள் நடந்த கலந்துரையாடலில் அபிவிருத்தி தொடர்பாக பேசப்பட்டதாக கூறப்பட்டாலும், விளக்க விசாரணையொன்றே நடைபெற்றதாக தோன்றுகிறது.

அரச அதிபரின் கருத்தாக இணையத்தளம் வெளியிட்ட செய்தி தொடர்பான விசாரணையே அன்று நடைபெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்த சந்தேகம் எழக் காரணம் என்னவெனில், அந்த சந்திப்பு முடிந்த கையோடு அரச அதிபர் இணையத்தள செய்திக்கு எதிரான மறுப்பறிக்கையொன்றை ஊடகங்கள் பலவற்றிற்கும் அனுப்பியுள்ளார். இது தென்பகுதி ஊடகங்கள் சிலவற்றில் தலைப்புச் செய்தியாகவும் வெளிவந்துள்ளது.

அபிவிருத்தி தொடர்பாகப் பேசவருபவர்கள் ஏன் முன்னறிவித்தலின்றி வரவேண்டும்? வந்தவர்கள் எதற்காக அபிவிருத்திகளை முன்னெடுக்கவேண்டிய திணைக்கள தலைவர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடாமல் விட்டார்கள்? அன்றைய தினம் மாலை அரச அதிபர் தலைமையில் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்துக்கு ஒஸ்ரின் தலைமையிலான குழு வருவதாகக் கூறப்பட்டபோதும், இது இறுதியிலே இரத்தானது ஏன்? கடந்த பல வருடங்களாக அடையாளப்படுத்த முடியாதிருந்த அபிவிருத்திப் பணிகளை, வெறும் இரு மணிநேரக் கலந்துரையாடலில் எப்படி அறிய முடிந்தது. இது இவ்வாறிருக்க,

அமைச்சர் மகேஸ்வரனோ ஒஸ்ரின் தலைமையிலான குழு பிரதமரிடம், தான் விடுத்த பணிப்புரைக்கமையவே வந்ததாகவும், எனவே வடபகுதி அபிவிருத்தி தொடர்பாக அரசு கவனம் எடுத்துள்ளது. எனவே நான் பதவி விலகும் அறிவிப்பை வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார். விடயம் அறிந்த வட்டாரங்கள் ஒஸ்ரின் வருவது மகேஸ்வரனுக்கே முன்னரே தெரியாதெனப் பேசிக்கொள்கிறார்கள். எதைச்சொல்லித் தப்புவது என இருந்த அமைச்சருக்கு, ஒஸ்ரின் அகப்பட்டார்- தப்பித்துக்கொண்டார்.

இந்த நிலையில், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஒரு பகுதியும் அமைச்சர் மகேஸ்வரனிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் - ஒரு செய்தி உலாவருகிறது. இந்தக் கட்டுரைத் தொடரிலே ஐயப்பாடுகளுடன் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களின் உண்மைத் தன்மைகளைப் புரிந்துகொண்டவர்கள் இரு பகுதியினர். ஒரு பகுதியினர் - இந்த விடயங்களில் சம்பந்தப்பட்ட உயர்மட்ட அதிகாரிகள். மறு பகுதி ஆண்டவன்தான்.

### சைபீரியாவின் துருவப்பகுதியில்

# 30000 ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந்துள்ளார்களாம்

## தடயப் பொருட்களின் மூலம் தகவல்



சைபீரியாவின் துருவப் பகுதியில் 30,000 ஆண்டுகளுக்கு முன்னரும் மனிதர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இந்த மனிதர்கள் - தற்போதைய அமெரிக்க மக்களின் மூதாதையர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறிங் எனப்படும் ரஷ்யாவிற்கும் அலஸ்காவிற்கும் இடைப்பட்ட பகுதியில் குறிப்பாக, அமெரிக்காவின் நுழைவாசலில் அண்மையில் கற்கால உபகரணங்கள், தந்தத்தினால் செய்யப்பட்ட ஆயுதங்கள், இறைச்சிக்காக வெட்டப்பட்ட மிருகங்களின் எலும்புகள் போன்றவற்றை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

முன்னர், சில்லியில் கண்டுபிடிக்கப்பட்டவற்றைவிட பல மடங்கு காலத்திற்கு முந்திய கைவினைப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதற்காக, ஆய்வு செய்யப்பட்ட ஜானா ஆற்றுக்கருகில் வேடர்கள் வசித்து வந்ததாகக் கூறும் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு அருகில் அமைந்துள்ள பிரதேசங்கள் பனிப்பாறைகளினால் மூடப்பட்டிருந்த போது, இந்த மூதாதையர்கள் வாழ்ந்த பிரதேசம் சமதரையாகக் காணப்பட்டதாகவும்- குதிரைகள், எருதுகள் போன்ற மிருகங்கள் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் தொன்மைச் சான்றுகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன், அருகில் அமைந்துள்ள வேறொரு பகுதியில் 11000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கெயிட்டியின் சுதந்திரதினத்துடன் தேர்தல் நடத்தப்பட உள்ளது!

## அந்நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு

பிரான்சிடம் இருந்து சுதந்திரம் கிடைத்த, 200 ஆவது ஆண்டு நிகழ்வுக் கொண்டாட்டத்தில விரைவில் கெயிட்டியின் நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலை நடத்தவுள்ளதாக, ஜனாதிபதி ஜீன் பேர்னாட் அரிஷ்ரைட் தெரிவித்தார்.

தேர்தலுக்கான திகதி குறிப்பிடவில்லையெனினும், ஏழைமக்களுக்கு உதவுவதற்குப் பல திட்டங்களை உருவாக்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அரிஷ்ரைட்டின் ஆதரவாளர்களுக்கும், எதிராளிகளுக்கும் இடையே இந்த விழாவின்போது மோதல்கள் ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இந்த நாட்டில் அடிமை வியாபாரம் நடைபெற்று வந்துள்ளதாகவும், இந்த அடிமைகளின் கிளர்ச்சியின் காரணமாகவே இந்த நாடு சுதந்திரம் பெற்றிருந்தது.

இந்த நிலையில், கெயிட்டியின் சுதந்திரத்திற்கு காரணமாக இருந்த, ஏழை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கவுள்ளதாகவும், ஜனாதிபதி அரிஷ்ரைட் தெரிவித்தார்.

சுதந்திரம் கிடைத்த 200 ஆண்டுகளில் கெயிட்டியில் 53 தலைவர்கள் ஆட்சி நடத்தியுள்ளதாகவும், இவர்களில் 23 தலைவர்கள் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

### 2 ஆம் உலக யுத்த நிகழ்வுகளுக்காக

## ஜேர்மன் அதிபர் பிரான்ஸ் செல்லத்திட்டம்

இரண்டாவது உலக யுத்த காலப்பகுதியின்போது, பிரான்ஸ் ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. பிரான்சின் ரோமான்டி பிரதேசத்தில் தரையிறங்கிய கூட்டுப் படையினர்- அந்த நாட்டை ஜேர்மனியின் பிடியிலிருந்து விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று 60 ஆண்டுகள் கடந்திருந்த வேளையில், அது தொடர்பான விழாவுக்கான அழைப்பை ஏற்று ஜேர்மன் பிரதமர் ஜேகாட் சொக்றோடெர் பிரான்சிற்கு செல்லத் திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் போர்க்காலத்து எதிரிகளாக இருந்த இரண்டு நாடுகளிடையேயும் மீண்டும் நட்புறவு உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவிழாவிற்கு மேலும் பல உலகத் தலைவர்களும், குறிப்பாக, பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயரும் பங்குகொள்ளவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டத்தில், ஜேர்மன் அதிபர் சொக்றோடெர் சார்பாக பிரான்சின் அதிபர் சிராக் பங்குபற்றியிருந்தார். ஈராக்கிய போரின்பின் இரு நாடுகளிடையேயும் பிணைப்பு வலுப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சத்தினால் வால்டெஸ் துறைமுகம் மூடப்பட்டுள்ளது



அலாஷ்காவில் அமைந்துள்ள வால்டெஷ் எண்ணைத் தாங்கிகளுக்கு, எண்ணை நிரப்பப்பட்டு வந்துள்ளது. திவீரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக அத்துறைமுகம் மூடப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமையில இருந்து வியாழக்கிழமைவரை இந்த துறைமுகம் மூடப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்புக் கருதியே இததுறைமுகம் மூடப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் உளநாட்டு பாதுகாப்பதிகாரி தெரிவித்துள்ளார்

புறூட்கோ பகுதியில் அமைந்துள்ள எண்ணைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணை, அலாஷ்காவில் உள்ள துறைமுகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது 17 வீதமான எண்ணை அமெரிக்காவின் உள்நாட்டுத் தேவைகளுக்கு பாவிக்கப்பட்டு வருகின்றது.

# இரண்டு வருடங்களுக்குப் பின்னர் இந்திய-பாகிஸ்தான் விமானசேவை

## வெளியுறவு அமைச்சர் முதற் பயணம்





இந்திய நாடாளுமன்றம் மீது - பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்கியதைத்தொடர்ந்து, சீர் குலைந்திருந்த இந்திய - பாகிஸ்தான் உறவுகள் இப்போது மீண்டும் சீர்படத்தொடங்கியுள்ளது.

இதனொரு கட்டமாக இரண்டாண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த இரு நாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்து, புத்தாண்டு தினத்தில் தொடங்கியது. சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு பிரதமர் வாஜ்பாய் இன்று பாகிஸ்தான் செல்லவுள்ளார். அதற்கு முன்னதாக, நேற்று முன்தினம் இந்திய - பாகிஸ்தான் விமானப்போக்குவரத்துத் தொடங்கியது. நேற்று முன்தினம் விமானப்படை விமானத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சின்ஙகா, தேசியபாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஸ் மிஸ்ரா, வெளியுறவு இணை செயலாளர் அருண்சிங் மற்றும் உயர் அதிகாரிகள் சென்றனர். சார்க் மாநாட்டுக்கு முன்னதாக நடக்கும் ஏழு நாடுகள் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் ஜஸ்வந்சின்கா கலந்து கொண்டார்.

இதேவேளை, நேற்று முன்தினம் பாகிஸ்தான் ஏர்லைன் விமானம், டெல்கி இந்திரா காந்தி சர்வதேச விமானநிலையத்திற்கு வந்தது. அதில் 40 பயணிகள் வந்தனர். பிறகு அந்த விமானம் 116 பயணிகளுடன் லாகூர் நகருக்கு புறப்பட்டுச் சென்றது.

# அ.தி.மு.கவுடன் கூட்டணியா? சிந்திக்கவே இல்லையாம்!

## வெங்கையா நாயுடு கூறுகிறார்

அ.தி.மு.க.வுடன் கூட்டு சேருவது பற்றி இன்னும் நினைத்து பார்கவேயில்லை என்று, பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு கூறினார்.

அ.தி.மு.கவுடன் கூட்டுச்சேர பா.ஜ.க. தயங்காது என்று, அதன் தேசிய பொதுச்செயலாளர் இல.கணேசன் தெரிவித்தார்.

ஆனால், நேற்றுமுன்தினம் அந்தக் கட்சியின் தேசியத் தலைவர் வெங்கையா நாயுடு, அ.தி.மு.க.வுடன் பா.ஜ.க கூட்டுச்சேருவதுபற்றி, இன்னும் நினைத்துகூட பார்க்கவில்லை என்று கூறியுள்ளார்.

வெங்கையாநாயுடு நேற்றுமுன்தினம் திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம கூறியதாவது-

மாநில அளவில் எந்தக் கட்சிகளுடன் கூட்டுச் சேருவது என்பதில், நாங்கள் இன்னும் மனதை செலுத்தவில்லை. தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வுடன் கூட்டு சேருவது பற்றி நினைக்கவேயில்லை.

தி.மு.க. தலைவர் கருணாநிதியும், சோனியாவும் தொலைபேசியில் பேசியிருப்பது பற்றி கேட்டதற்கு சென்னை - டெல்கி இடையே நடந்துள்ள தொலைபேசி உரயாடலுக்குப் பிறகு என்ன நடக்கப்போகிறது? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

பா.ஜ.கவை எதிர்ப்பதில் காங்கிரசுடன் கூட்டுச்சேர மறுக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸுடன் சேர சம்மதித்திருப்பதன் அர்த்தம் என்ன? என பது எனக்குத் தெரியவில்லை.

மேலும், மக்களவைத் தேர்தலில் மும்முனைப்போட்டி ஏற்படும் என்று, எதிர்பார்ப்பதாகவும் வெங்கையாநாயுடு தெரிவித்தார்.

இதேவேளை, துணைப் பிரதமர் அத்வானி நேற்றுமுன்தினம்மாலை, தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு தொலைபேசி செய்து, புத்தாண்டு வாழ்த்து தெரிவித்ததாகவும், அவரது வாழ்த்தை ஏற்றுக்கொண்டு, பதிலுக்கு ஜெயலலிதாவும் வாழ்த்து தெரிவித்தார் என்றும், தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

## ஊர்சுற்றி எழுதுவது

ஜப்பான்காரர்கள் பெரும்பாலும் நம்ம சாதுக்கள், சந்நியாசிகள் மாதிரி முடி வளர்த்திருக்கிறார்களே எதுக்காக?

அவர்கள் சந்நியாசி வேஷம் போடவில்லை. அப்படிவேஷம் போடுவதனால் தாடியுமல்லவா வளர்த்திருப்பார்கள் என்றார் நண்பர்.

அங்கே முடிவெட்டுவதென்றால் இங்கு ஒரு ஆடம்பரமான கலியாணத்துக்குச் செலவிடும் பணத்துடன் போகவேண்டியிருக்கும். முடிவெட்டுவதற்கு அவ்வளவு பெரியதொகை செலவிடவேண்டிவரும் என்றார், அங்கு இரண்டு மாதங்கள் தங்கியிருந்து திரும்பிய மட்டக்களப்பு மாநகர சிறப்பு ஆணையாளர் ச.நவநீதன்.

பொதுவாக மேல்நாடுகளிலும் முடிவெட்டும் செலவு அதிகம்தான், கடந்த வருடம் ஜேர்மனியில் எஸ்லோஹே என்ற ஒரு கிராமப்புற நகரில் ஒரு அன்பரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன்.

ஐயா, வாங்க, உள்ளேவாங்க, வந்திருங்கோ, நான், கையில் வேலையாக இருக்கிறேன் என்று அன்பரின் குரல்கேட்டது.

வாசலில் நின்று எட்டிப்பார்த்தேன். அவரது வீட்டு வரவேற்பறையில் அவர் சீப்பும், கத்தரிக்கோலுமாக நின்றார். அவர் முன்பாக ஒருநாற்காலியில் அவரது சின்ன மகன் கையில் ஒரு முகம்பார்க்கும் கண்ணாடியைப்பிடித்தபடி இருந்தான்.

நான் உள்ளே போனேன் நம்ம ஊரிலே முடிவெட்டியபின் குளிக்காமல் வீட்டுக்குள் நுழைய முடியுமா? முகச்சவரம் செய்தபின் முகம் கழுவாமல் அறைக்குள் போனாலே அடுக்கறைக்குள் இருந்து கூச்சல்கிளம்பும். இங்கே பார்த்தீர்களா நடுவீட்டுக்குள் வைத்தே மகனுக்குத் தலைமயிர் வெட்டிக் கொண்டிருக்கிறேன் என்றார் அன்பர்.

மேல்நாடுகளில் குடியேறியுள்ளவர்கள் பொதுவாக எல்லோருமே இயன்றவரை தமக்கும், தமது பிள்ளைகளுக்கும் முடிவெட்டுவதை அவர்களே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். சிலருக்கு சில நண்பர்கள் ஓய்வுநாளில் முடிவெட்டி உதவி செய்கிறார்கள்.

இங்கு இந்த உதவி செய்வதால் அவர்களுக்கு சாதிப்பெயர் ஏற்படவில்லை, குடிமகன் என்ற பட்டமும் கிட்டவில்லை! எல்லாம் பணப்பிரச்சனைதான்!

ஜப்பான் பிரதமரும் நீண்டதலை முடியுடன் தான் காட்சியளிக்கிறார். அவருக்கும் இந்தக் கஷ்டம் தானோ? என்றார் நண்பர்.

இவருக்கு என்ன கஷ்டமோ வெளியில் சொல்ல முடியாமலிருக்கலாம் அல்லது நீண்டமுடி வளர்த்துப் பழகிப்போயிருக்கலாம். இனி அதைக்குட்டையாக வெட்டிவிட்டால் அவரின் அடையாளமே இல்லாமல் போய்விடுமென்று நினைத்திருக்கலாம்.

நம்ம நாட்டிலும் இப்போது முடிவெட்டுவதற்கும், முகச்சவரம் செய்வதற்கும் கட்டணம் அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது என்றார் அழகாக முடிவெட்டி, மழுங்கச் முகச்சவரம் செய்திருக்கும் மற்றொரு நண்பர்.

எல்லாப் பொருள்களின் விலைகளுமே எட்டாத உயரத்துக்குப் போய்க்கொண்டிருக்கும்போது முடிவெட்டும் செலவுமட்டும் ஒரேமாதிரி ஆதிகாலத்திலிருந்தபடி இருக்கவேண்டுமாக்கும்?

ஆனால், முன்னர் வெட்டியமாதிரி இப்போது முடிவெட்டுவதை சும்மா விட்டுவிடுவார்களா? இப்போது எங்கு நவநாகரிகமாக சினிமாக்கதாநாயகன் முடி வெட்டுடியிருப்பதுபோல் வெட்டிவிடுவார்களே அங்கே தேடிச்சென்று நல்லா முடி வெட்டிக்கொள்கிறார்கள். இதற்காக அதற்குரிய பணம் கொடுத்துத்தானேயாக வேண்டும். அதுமட்டுமா முடிவெட்டினாலும் முகச்சவரம் செய்தாலும் அதன் பின் பாவிக்கப்படும் கிறீம்கள், வாசனைகள் எல்லாம் சும்மாவா கிடைக்கும்?

இப்போதிருப்பதிலேயே, மொட்டை வழிப்பதற்கு பிளேற்றுக்கு இரண்டு ரூபாய் கொடுத்துப் பெறவேண்டும். இதன்பின் எதுவும் கொடுக்கவேண்டாம் என்று எத்தனை அறிவித்தல்கள் போட்டிருந்தாலும். இருபதுரூபாய் வையென்று பகிரங்கமாகவே பணம் கறந்த பின்தானே முடியை வழித்து மொட்டை போடுவதற்குத் தலை மீது கத்தியை வைக்கிறார்கள்.

இது மயிர்க்கதையென்று அலட்சியப் படுத்தமுடியாத சங்கதிகளப்பா?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

# அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் ஈராக்கில் நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டது!

அமெரிக்க ஒ எச் 58ரக கண்காணிப்புக் ஹெலிகொப்டர் ஒன்று, ஈராக்கின் மேற்குப்பகுதியில் உள்ள பலூஜா நகரில் ஈராக்கிய நேரப்படி நேற்று பிற்பகல் 12.20 மணிக்கு சுட்டுவீழ்தப்பட்டது.

பலூஜா பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றிக்கொண்டிருந்த அமெரிக்கப் படையினருக்கு வானிலிருந்து பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தபோதே, இந்தக் ஹெலி ஏவுகணைத் தாக்குதல்மூலம் சுட்டுவீழ்த்தப்பட்டதாக அமெரிக்கப்படைத் தளபதியான மேஜர் ஜெனரல் மார்க் ஸ்மித் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தில் ஒரு அமெரிக்க படைவீரர் கொல்லப்பட்டும் மற்றொருவர் படுகாயமடைந்தும் உள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் இரண்டு கார்களில் தப்பிச் சென்ற வேளை, அவர்களை இனங்கண்ட அமெரிக்கப்படையினர். பிடிப்பதற்காகச் சென்றபோது, ஒரு காரில் பயணம்செய்தவர்கள் பலூஜா நகரில் சனிமுஸ்லிம் மக்கள் வாழும் பகுதிக்குள் தப்பிவிட்டதாகவும், மற்றைய காரில் பயணம் செய்த நால்வர் பிடிக்கப்பட்டதாகவும், அமெரிக்கப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.






'தென்பகுதியில் மீண்டும் மதவாதம் தலையெடுக்க தொடங்கீட்டுது போலை இருக்கு...'

'ஓமோம்... மொஸ்கோவில இறந்த அந்தத் தேரரின் இறுதிச் சடங்கை ஒரு மதக்கலவரத்திற்கான ஆரம்ப இடமாக சில சிஹல உறுமயக்காரர் மாற்ற முயன்றிருக்கினம் என்று செய்தியிலை கேட்டன்...'

'இனக்கலவரத்தை ஏற்படுத்த முயன்று, கடந்த காலங்களில மூக்குடைபட்ட உறுமயக் காரர்கள், தொடர்ந்து ஏதாவது குழப்பம் செய்துகொண்டுதான் இருக்கினம்'

'அவைக்கு சரியாத்தான் மதம் பிடிச்சிருக்கு.... யானைக்கு மதம் பிடிச்சால் காடு தாங்காது... மனிசனுக்கு மதம் பிடிச்சால் நாடு தாங்காது...'

'சரியாச் சொன்னாய்... மணியம் அரசியல்வாதிக்கு மதம் பிடிச்சால் அது என்னென்னவோ எல்லாம் செய்யும்... அதோடை இப்ப மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டு வரப்போயினம்... அதால என்னென்ன கரைச்சல் வரப்போகுதோ...'

'கனகண்ண... மதம் மனதோட மட்டும் இருக்க வேண்டும்... அதைவிட்டு வெளியவந்திட்டுதெண்டால் அதால வாற கெடுதிக்கு அளவு கணக்கு கிடையாது...'

ஷகடவுளின்ர பெயரால் மதம், மதத்தின்ர பெயரால் இனம்... இனத்தின்ர பெயரால் அரசியல்.... அரசியலின்ர பெயரால் மோதல்... மனிசர் எங்கபோய்க் கொண்டிருக்கினமென்று தெரியேலை...!?'

தெருவாசி

# மாமனிதர் குமார் பொன்னம்பலம் நான்காம் ஆண்டு அஞ்சலிக்கூட்டம்



மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மறுநாள் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உபதலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில்,

நாவாந்துறை பங்குத்தந்தை ம.சேவியர் கருணாரட்ணம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க.மோகனதாஸ், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சண்முகதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ப.பகீரதன், இலங்கை தமிழர் ஆசிரியசங்க பொதுச்செயலாளர் த.மகாசிவம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் நினைவுரை ஆற்றவுள்ளனர் என மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த் தக்குழு அறிவித்துள்ளது.

# வரவு செலவுத்திட்ட யோசனை நேற்று முதல் நடைமுறைக்கு!

2004 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் சில நேற்றுமுதல் நடைமுறைக்குவந்திருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகள், ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு மற்றும் உரமானியம் என்பன அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதேவேளை - 15 சதவீத வற்வரி நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அத்துடன் கையடக்கத் தொலைபேசிகளுக்கான வருடாந்த கட்டணமாக 300 ரூபா அறவிடப்படும் யோசனையும் நேற்று முதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

## பலாலி விமான ஓடுபாதை புனரமைப்புக்கு...

விமானம் மூலம் விநியோகங்களைப் பெறும் படையினர் பாதிக்கப்படுவர் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். 1500 அடி நீளமான இந்த விமான நிலைய ஓடுபாதையை வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்திய விமானப்படையின் அறிவுறுத்தலின் கீழ் புனருத்தாரணம் செய்யவுள்ளது.

மிகவும் நவீன முறையில் விமான நிலைய ஓடுபாதை புனருத்தாரணம் செய்யப்படவுள்ளதாகவும், சமிக்ஞை விளக்குகள் நவீன முறையில் பொருத்தப்படுவதோடு, ஓடுபாதையைக் கண்காணிக்கும் கருவிகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விமான ஓடுபாதையைத் திருத்தும்போது வழக்கமான விமானப் பயணசேவை எவையும் பாதிக்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்படுவதுடன், விமான நிலைய ஓடுபாதை திருத்துதல் மூலம் மந்தமான நிலையிலுள்ள யாழ்.குடா புனரமைப்பு வேகம் பெறும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓடுபாதை திருத்தும் பணி நிறைவடைந்ததும், இரத்மலானை - பலாலி ஆகிய இடங்களுக்கு இடையிலான விமான சேவை ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் மூலம் இலங்கையும் - இந்தியாவும் பாதுகாப்பு தொடர்பில் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காணமற்போன...

பிரேதபரிசோதனைகள் மற்றும் விசாரணைகளின் பின்னர் சடலம் அவரது கணவரிடம் ஒப்படைக்கப்பட்டது. வீட்டிலிருந்து புறப்படும்போது அவர் அணிந்திருந்த தாலிக்கொடி, சங்கிலி, காப்பு உள்ளிட்ட பெறுமதியான நகைகள் சடலத்திலிருந்து மீட்கப்பட்டன.

## ரிரோன்....

வெளிநாட்டுத் தூதுவர்களை ஜனாதிபதியே நியமிக்க வேண்டும் எனவும் அந்த முன்னாள் இராஜதந்திரிகள் தெரிவித்ததாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோயிலா மனை வீதியூடாக மக்கள் செல்ல அனுமதி

தென்மராட்சி கோயிலாமனைக் கிராமத்திற்குச் செல்லும் வீதியூடாக மக்கள் போக்குவரத்து செய்வதற்கு படையினர் நிபந்தனையுடன் அனுமதித்துள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களாக படையினர் தடைவிதித்திருந்த இந்த வீதியைத் திறக்குமாறு அப்பகுதி மக்களும், பொது அமைப்புக்களும் இணைந்து தென்மராட்சி பிரதேச செயலகம் முன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து நேற்றுக்காலை 10.30 மணிக்கு படை அதிகாரிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் ஒன்றரை மணிநேரம் நடத்திய கலந்துரையாடலில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த வீதியூடாக பொதுமக்கள் பயணம் செய்வதற்கு படையினர் சில நிபந்தனையுடன் அனுமதித்துள்ளனர்.

காலை ஆறு மணி முதல் இரவு ஏழு மணிவரை இந்த வீதியூடாக போக்குவரத்துக்கு அனுமதிப்பதுடன், இரவு வேளையில் இவ் வீதியூடாக போக்குவரத்துச் செய்வதாயின் அருகிலுள்ள சோதனைச் சாவடியில் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் படையினரால் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (25,202)

## தேசிய எழுச்சிப்பேரவை அங்குரார்ப்பணம்

வவுனியா மாவட்டத்தில் முதலாவது தேசிய எழுச்சிப் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்று மாலை 4 மணிக்கு வவுனியா முத்தையா மண்டபத்தில் எஸ்.என்.ஜி. நாதன் தலைமையில் இந்தக் கூட்டம் ஆரம்பமானது. இதில் பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலையும், தேசியக் கொடியினை மாவீரர் ஒருவரின் பெற்றோரும் ஏற்றிவைத்தனர்.

வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உரையாற்றினார். வவுனியா மாவட்டத்தில் இயங்கும் 26 ஊரக அமைப்புக்களிலிருந்து 11 பேர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைக்கு தெரிவுசெய்யப்பட்டனர். (03)

## ஐ.நா.சமாதான...

களையும், ஊனமுற்றவர்களையும், தற்போது பணிபுரிபவர்களுக்கும், பலகல்ல தனது நன்றியைத் தெரிவித்தார்.

உயரதிகாரிகளுடன் சென்ற இராணுவத் தளபதி போரில் படுகாயமடைந்து வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் படையினருக்கு புத்தாண்டு அன்பளிப்புகளை வழங்கினார்.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY :-
MR.H.A.HARY
புதிய பிரிவு ஆரம்பம்
04.01.2004 ஞாயிறு
மாலை 4.00 மணி
Sunday / Saturday 4 p.m - 5 p.m
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(சி/2020)

# மின் உற்பத்தி அதிகரிக்க அரசாங்கம் துரித திட்டம்

அடுத்து ஐந்து வருட காலப்பகுதியில் மின்சார உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் துரித திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்துக்கமைய 800 மெகாவாட்ஸ் மின்சாரம் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படவிருக்கிறது. இதில், 650 மெகா வாட்ஸ் மின்சாரம் ஜெனரேற்றர் மூலமாக எரிபொருளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படவிருக்கிறது.

மின்சக்தி எரிபொருள் குறித்து தகவல் வெளியிடுகையில், 20 ஆண்டு திட்டத்துக்கமைய 3200 மெகாவாட்ஸ் மினசாரத்தை உற்பத்தி செய்யத்திட்டமிடப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் விசாரணைகள் பாதிப்படைந்துள்ளன

## ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரம சூரிய தெரிவிப்பு

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் வெற்றிடம் நிரப்பப்படாததால், தேடுதல் மற்றும் விசாரணைகள் நடவடிக்கை எதையும் செய்யமுடியாதிருப்பதாக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணைக் குழு ஆணையாளர் கிங்ஸி விக்கிரமசூரிய தெரிவித்தார். குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 110 முறைப்பாடுகள் கிடைத்துள்ள போதிலும் அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கமுடியாமல் இருக்கிறது.

கடந்த ஆண்டில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு ஆயிரத்து 803 முறைப்பாடுகள் கிடைத்தன. இதில் 721 குற்றச்சாட்டுக்கள் ஊழல் நடவடிக்கை சம்பந்தப்பட்டது. 390 முறைப்பாடுகள் லஞ்ச குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமானது. சட்டவிரோதமாக சொத்துக்கள் சேர்ப்பது தொடர்பாக 57 மனுக்கள் கிடைத்துள்ளன. கடந்த ஆண்டில் லஞ்ச ஊழல் சம்பந்தமாக 23 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பட்டாசுத் தொழிற்துறையின் பிரச்சனையை ஆராய குழு!

## பாதுகாப்பு அமைச்சு நியமனம்

பட்டாசு தொழிற்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

இந்த நோக்கத்திற்காக ஆறு பேரைக் கொண்ட ஆலோசனைக் குழுவினரை பாதுகாப்பு அமைச்சு நியமித்திருக்கிறது. அது குறித்து வெடிபொருள் கட்டுப்பாட்டு பிரதி ஆணையாளர் ஏ.திசநாயக்க தெரிவிக்கையில்,

இந்த ஆலோசனைச்சபையில் பட்டாசு தொழிற்துறையைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்கியுள்ளனர். பட்டாசுத் தொழிற்துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைத் தீர்ப்பதற்கு சிபார்சுகளை இந்த ஆலோசனைக் குழு வழங்கும் என்றும் குறிப்பிட்டார்.

# அழைப்பை ஏற்படுத்துபவரே கட்டணம் செலுத்தவேண்டும்

## ஒப்பந்தம் விரைவில்

கையடக்க தொலைபேசிகளுக்கு உள்வரும் அழைப்புக்கள் இலவசமாக்கப்படுகின்றபோது, அந்த அழைப்பை ஏற்படுத்துகின்றவர்களே அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தவேண்டுமென தொலைத் தொடர்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தச் செயற்பாட்டு ஒப்பந்தத்தில் ஏழு கையடக்கத் தொலைபேசி நிறுவனங்கள் கைச்சாத்திடவுள்ளன. இந்த ஒப்பந்தம் எதிர்வரும் 15 ஆம்திகதிக்கு முன்னர் செய்துகொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.